# சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்



கலாநிதி ஆறு. திருமுருகன்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்

# சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்

கலாநிதி ஆறு. திருமுருகன்

இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

நூல்: சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்
ஆசிரியர்: கலாநிதி ஆறு. திருமுருகன்
பதிப்பு: 2016

வெளியீடு:
இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248 1/1, காலி வீதி, கொழும்பு 04.

# வெளியீட்டுரை

சைவ சமய மீட்டுருவாக்கத்திலும், தமிழின் வளர்ச்சிக்கும் தன் வாழ் நாளெல்லாம் தளராது உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவ சமய குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருக்கு அடுத்த நிலையில் வைத்து ஐந்தாம் சமயக்குரவர் என்றும் போற்றக் கூடிய தகுதியுடையவர்.

சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப்பகுதியிலே தோன்றியவர் தாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவ்வாறு சைவம் நலிவுற்றிருந்த நிலையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். ஈழத்தமிழரின் சமய, சமுதாய வரலாற்றிலே ஆறுமுகநாவலர் என்றும் போற்றத்தக்கவர். அத்தகைய சிறப்புமிக்க நாவலர்பெருமான் தொடர்பாக இன்றைய தலைமுறை அறிவதற்காக **'சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்"** எனும் இந்நூல் திணைக்களத்தின் வேண்டுதலுக்கமைய சமயப்பணி மற்றும் அறப்பணி ஆகியவற்றைத் தன் இரு கண்களாகக் கொண்டு நாளும் பொழுதும் இயங்கி வரும் மதிப்புக்குரிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் மிகச்சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளார். கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டுகள் நிறைவையொட்டி ஆறுமுகநாவலர் அவதரித்த புண்ணியபூமியாகிய நல்லூரில், நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப்பண்பாட்டு நிதியத்தின் முதலாவது வெளியீடாக இந்நூலை வெளியிடுவது குறித்து, மகிழ்ச்சியடைகின்றேன்.

**அ.உமாமகேஸ்வரன்**

பணிப்பாளர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# முகவுரை

எம்மண்ணில் உதித்த தெய்வத்திருமகன் நாவலர் பெருமானின் வாழ்வு மகத்தானது. அன்னாரின் தூய சிந்தனையைச் சைவத் தமிழர்கள் இன்றும் அறிந்திருத்தல் வேண்டும். மண்ணிற் பலர் பிறக்கின்றார்கள். ஒருநாள் மண்ணை விட்டுப் போகிறார்கள். சிலர் பிறருக்காக அர்ப்பணிப்புடன் செய்த தொண்டினால் அவர்கள் காலங்கடந்தும் நேசிக்கப்படுகிறார்கள். திருவள்ளுவர் திருக்குறளில்,

*"ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றைய ரெல்லாம்*
*செத்தாருள் வைக்கப் படுவர்"*

என்று குறிப்பிட்ட வார்த்தைகள் நாவலர் பெருமானுக்கு நன்றே பொருந்திற்று. நாவலர் பெருமானின் எண்ணங்கள் இன்னும் இறக்கவில்லை. அவர் எடுத்த முயற்சிகள் இன்றும் வீண்போகவில்லை. ஈழத்திலும் இந்தியாவிலும் மட்டுமல்ல புலம்பெயர்ந்து ஈழத்தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் நாவலர் பெருமானை நன்றியோடு நினைவு கூருகிறார்கள். நாவலர் பெருமான் சூரிய சந்திரர் உள்ள வரை வாழும் தகுதி பெற்றுள்ளார். சைவமும் தமிழும் உள்ளவரை நாவலர் என்னும் காவலரை விஞ்சிவிட யார்தான் வருவார்? இப்புண்ணிய சீலர் தொடர்பாக இன்றைய தலைமுறை அறிவதற்காக இச்சிறிய நூல் ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மதிப்பார்ந்த பணிப்பாளர் திரு.

அருளானந்தம் உமாமகேஸ்வரன் அவர்களின் வேண்டுதலுக்கமைய என் சிந்தைக்கு எட்டிய விடயங்கள் சிலவற்றை இந்நூலிற் தொகுத்து வழங்கியுள்ளேன். இன்றும் நாவலர் பெருமான் பற்றிப் பல விடயங்கள் கூறுவதற்குண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அடுத்த நூலில் உங்களைச் சந்திக்கலாம் எனக் கருதுகிறேன். இந்நூற் தொகுப்பில் எனக்கு உறுதுணையாக விளங்கிய இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தரும், எனது மாணாக்கனுமாகிய குணரட்ணம் சுதாகரன் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

**செஞ்சொற் செல்வர்**
**கலாநிதி ஆறு. திருமுருகன்**

**09.11.2016**

## நாவலர் பிறந்த சூழல்

ஈழ நாட்டுச் சைவத் தமிழர் வரலாற்றில் ஒரு விடிவெள்ளியாக இன்றுவரை போற்றப்படுபவர் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றால் மிகையாகாது. இப்பெருமகனார் வரலாறு ஈழத்துச் சைவத்தின் மறுமலர்ச்சி வரலாற்றின் தொடக்கம் எனலாம். இப்பெருமகன் தோன்றியிருக்காவிட்டால் ஈழத்துச் சைவ வரலாற்றினை நினைத்தும் பார்த்திருக்க முடியாது. இன்று ஈழநாட்டில் சைவமும், சைவத்தமிழ்ப் பாடசாலைகளும், தனித்துவமான தமிழ்ப் பேச்சு நடை மரபும், எழுத்து நடை மரபும் நின்று நிலை பெறுவதற்கு வித்திட்டவர் நாவலர் பெருமான். ஈழநாட்டைத் தாண்டிப் போர்ச் சூழலால் பல லட்சம் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து மேலுலகில் பல பாகங்களிலும் வாழ்கிறார்கள். இவர்கள் சைவ ஆலயங்களைத் தாம் வாழும் நாடுகளில் உருவாக்கி அங்கு சைவமும் தமிழும் எம் சமூகம் பின்பற்ற வழி செய்துள்ளார்கள். இவர்கள் இவ்வுணர்வோடு வாழ்வதற்கு இவர்களின் மூதாதையர்களிற்கு வழிகாட்டியவர் நாவலர் பெருமானே. ஆதலால் நாவலர் பெருமானால்

ஈழநாட்டுச் சைவம் உலக அரங்கில் உயர்ந்து நிற்பதனைக் கற்றறிந்த ஆய்வாளர்கள் உணர்ந்து கொள்வர். நாவலரின் சிந்தனையில் எழுந்த தீர்க்க தரிசன முயற்சிகள் பெரும்பாலும் வீண்போகவில்லை. அவை இன்றும் எமக்கு அரணாக உள்ளன.

நல்லைநகர் நாவலர் பெருமான் நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோயிற் சூழலிற் பிறந்தவர். அவரது குலதெய்வம் நல்லூர்க் கைலாசநாதரும், நல்லூர்க் கந்தப்பெருமானும் என்பதை யாமுணரலாம். நாவலரின் மூதாதையர்கள் உயர்ந்த சமயப்பற்றோடும் மொழிப்பற்றோடும் வாழ்ந்த உத்தமர்கள். ஆதியில் ஈழநாட்டிற் குடியேறிய தமிழர்கள் ஏதோ ஒரு வகையில் இந்தியப் பூர்வீகத்தை கொண்டவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. நாவலர் பெருமானின் குடும்பத்தவர்கள் நல்லூரிலே கார்காத்த வேளாண் வர்ணத்திலே பாண்டிமழவர் குடியிலே தோன்றிய உயர்சைவ மரபினர் யாழ்ப்பாணத்திற் சிறப்புற்று வாழ்ந்தனர். இக்குடும்ப மரபிலே தமிழ் வேந்தர் காலத்தில் இராஜதானியாக விளங்கிய நல்லூர் சுற்றாடலில் இப்பெரும்பரம்பரை செல்வாக்குடன் விளங்கியுள்ளது. நல்லூரிற்குச் சமீபமாக உள்ள திருநெல்வேலி என்றும் கிராமத்தில் பிறந்து பசுவதைக்கஞ்சிப் பாரத தேசம் சென்று துறவு வாழ்வு வாழ்ந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர். ஞானப்பிரகாச சுவாமிகளின் மரபிற் தோன்றியவர் நாவலரின் மூதாதையர் என அறிய முடிகின்றது. இலங்கைக் காவல முதலியார் அவருடைய புதல்வர் பரமானந்தர் என்பவர், அவர் வழிப் பிள்ளைகள் கந்தர், இலங்கையர் என்பவர்கள். இவர்கள் ஒல்லாந்தர் காலந்தொட்டே அரச உத்தியோகம் பார்க்கும் பேறு பெற்றவர்களாக விளங்கினர். இக்குடும்பத்தவர்கள் சித்த ஆயுர்வேத வைத்தியத்திற் பெயர் பெற்றவர்களாக

விளங்கியுள்ளனர். இலங்கையில் அந்நியர் ஆட்சியில் முக்கிய பதவி வகித்த ஒல்லாந்தர் ஒருவருக்குத் தீராத நோயை மாற்றிய காரணத்தினால் இலங்கைக் காவல முதலியார் பரம்பரையில் வந்த பரமானந்தன் என்பவருக்குப் பரிசில்களும் பட்டங்களும் இதர வசதிகளும் ஒல்லாந்தர்களால் வழங்கப்பட்டது எனச் சரித்திர நூல் கூறுகின்றது. தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் கலைகளிலும் இக்குடும்பத்தவர்களுக்குப் பரம்பரையாக ஆர்வம் இருந்தது. இவர்களில் கந்தப்பிள்ளை என்பவர் நாடகங்களை எழுதுவதிலும் அரங்கேற்றுவதிலும் வல்லவராக விளங்கினார். இவர் பல வைத்திய நூல்களை ஏடுகளில் எழுதிப் பாதுகாத்துள்ளார். உத்தியோகமும் வைத்தியமும் செய்த இப்பெருமகன் பிறவிச் சைவராக, சைவப் பாரம்பரிய விதிமுறைகளைப் பேணுபவராக விளங்கினார். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியர்கள் எம்மண்ணை ஆட்சி செய்த காலத்திலும் சைவ நெறி பிறழாது காத்த குடும்பத்தவர்களை நாம் மறக்க முடியாது. ஒல்லாந்தர் உயர் பதவிகளை வழங்கிய வேளைகளிலும் அதைத் தொடர்ந்து ஆங்கிலேயர் காலத்தில் உயர்பதவிகள் வகித்த போதும் இராச உத்தியோகம் வகித்த சிலர் வீட்டுக்குள்ளே தம் சமயப் பாரம்பரியத்தையும், மொழிப் பாரம்பரியத்தையும் கடைசி வரை காப்பாற்றினர். அவ்வாறு காப்பாற்றிய குடும்பத்தில் உதித்த பெரியார் கந்தப் பிள்ளைக்கும் சிவகாமி அம்மைக்கும் ஐந்து ஆண் மக்களும் மூன்று பெண்மகளும் பிறந்தார்கள். இவ்வாண்மக்களும் நால்வர் பிரித்தானிய அரசினர் காலத்தில் இராச உத்தியோகங்களில் இருந்தனர். இக்குடும்பத்தின் இளைய புதல்வனாகப் பிறந்தவர் ஆறுமுகம் என்ற பெயரினைக் கொண்ட நாவலர் பெருமான் ஆவார். *18.12.1822* ஆம் ஆண்டு தமிழுக்கு மார்கழி *05*, புதன்கிழமை இரவு நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோயிலுக்குச்

சமீபமாகவுள்ள வீட்டிற் பிறந்தார். இவர்களது வீட்டுச் சூழல், கடவுள் பக்தி, கல்வி, சமய ஒழுக்கம், சான்றோர் உறவு என மிகச் சிறந்த சூழலாக அமைந்திருந்தது.

சிறுவயதில் யாழ்ப்பாணச் சூழலில் திண்ணைப் பள்ளிகளிலேயே ஆரம்பக் கல்வி கற்கும் மரபு இருந்தது. இன்று போல் பாலர் பாடசாலைகளோ, முன்பள்ளிகளோ, தமிழ்ப் பாடசாலைகளோ எம்மண்ணில் இருக்கவில்லை. கல்வியில் வல்ல சில சான்றோர்கள் தங்கள் வீட்டுத் திண்ணையில் (மண் திண்ணை) மெழுகிக் குருகுலக் கல்வி போலக் கல்வியை வழங்கும் மரபு இருந்தது. யாழ்ப்பாணத் திண்ணைக் கல்விப் பாரம்பரியம் பற்றிப் பலர் ஆராய்ச்சிகளை செய்து அதன் சிறப்புப் பற்றி எடுத்துரைத்துள்ளனர். திண்ணைப் பள்ளிகளை அமைத்தவர்கள் கல்வியைத் தானமாகவே வழங்கினர். கல்வித்தானம் சிவபுண்ணியம் எனக் கருதினர். கோயில் வழிபாடு போல் ஆன்மார்த்தமாக இக்கடமையைச் செய்தனர். திண்ணைப் பள்ளியை நடாத்திய சுப்பிரமணியபிள்ளை என்பவரிடம் நாவலரை அனுப்பினர். திண்ணைப் பள்ளிப் பாரம்பரியத்திற்கமைய நீதி நூல்களும் நிகண்டு முதலிய கருவி நூல்களும் நாவலர் தன் குருவிடம் கற்கத் தொடங்கினார். நிறைந்த மனன சக்தியுடைய சிறுவனாக விளங்கிய இவர் எட்டு, ஒன்பது வயதிலேயே தன் குருவிடம் கற்ற விடயங்களை வீட்டில் ஒப்புவிப்பதில் வல்லவராக் விளங்கினார். இச்சூழலில் ஆனி மாதம் திருமஞ்சன உற்சவ வேளையில் நாவலரின் தந்தை ஒரு நாடகத்தைப் பாடிப்பாடி எழுதிக் கொண்டிருந்த வேளையில் கையில் எழுத்தாணியும் எழுதும் சட்டமும் பிடித்தபடியே சடுதியிற் சிவபதமடைந்து விட்டார். ஒன்பது வயதிலேயே தந்தை குறையில் விட்ட நாடகத்தை நாவலர் தாமே பாடி எழுதி முடித்தார்.

நாவலருடைய வீடு உயர்ந்த கல்விச் சூழலாக விளங்கிய காரணத்தால் நாவலரின் சகோதரர்கள் ஆற்றல் மிக்க இவரை மிக உன்னதமான புலவர்களிடம் கற்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கருதினர். புகழ்பூத்த சரவணமுத்துப் புலவர், இருபாலை சேனாதிராஜ முதலியார் போன்ற பெருமக்களிடம் கற்கும் சந்தர்ப்பத்தை நாவலரின் சகோதரர்கள் ஏற்படுத்தினர்.

நாவலர் பெருமான் அதிகாலையில் நித்திரையால் எழுந்துவிடுவார். நீராடி, சிவதீட்சை வைத்துப்பின் ஏடுகளையும் எடுத்துக் கொண்டு கால்நடையாக இருபாலைக்குப் படிக்கச் சென்றார். மத்தியானம் வீடு திரும்புவார். போசனம் முடிந்ததும் திரும்பக் கால்நடையாகச் செல்வார். இரவு பத்துமணிக்குத்தான் வீடு வருவார். அவ்வளவு நேரமும் குருவிடம் மிக ஆழமாகக் கற்றார். உபாத்தியாயருக்குக் கற்பிக்க நேரமில்லாத வேளைகளில் குடியில்லா வீடுகளிற் போயிருந்து தாமாகவே படிப்பார் என நாவலரின் சரித்திரத்தை எழுதிய நாவலரின் உறவினராகிய த.கைலாசபிள்ளை அவர்கள் பதிவு செய்துள்ளார். நாவலர் கற்ற காலம் சகல தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் ஏட்டில் இருந்த காலம். குரு சொல்லச் சொல்ல எழுத்தாணியாற் பதிவு செய்வதும், தன் சிந்தையிற் கிரகித்து வைப்பதில் வல்லவராகவும் விளங்கினார். பத்து வயதில் புலவர்களின் பாக்களில் உள்ள பஞ்சலக்கணங்களில் பிழைகளை முறையே சொல்லுவார்.

நாவலரின் உறவினர்கள் நல்லூர், கைலாசநாதர் கோவில், வேறு சில கோவில்களிலும், வீட்டிலும் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் படிக்கும் மரபைப் பேணினர். இச் சூழலும் நாவலருக்கு மிகச் சிறிய வயதிலே புராணங்கள் பற்றிய ஆர்வத்தைத் தூண்டியது. நாவலரது நெருங்கிய உறவினராகிய விசுவநாத முதலியார்

மயில்வாகனர் என்பவர் சட்டத்துறை சார்ந்த நியாயவாதியாக விளங்கியவர். இவர் நாவலரைப் புராணப்படிப்பு நடைபெறும் கோயில்களுக்கு அழைத்துச் சென்றார். அங்கு நடைபெறும் புராணப் படிப்புகளை நாவலர் பொறுமையாகக் கேட்பார். புராணப் படிப்பு முடிந்ததும் அங்கு படித்தவர்கள் சொன்ன உரைகளில் உள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டத் தொடங்கிவிட்டார். சிலவேளைகளில் பாடியவர்களோடு தர்க்கம் செய்வார். பதினொரு வயதில் இத்தகைய பாண்டித்தியம் உடைய நாவலரைப் புராணம் படிப்பவர்கள் கண்டு மெச்சினர். நாவலரின் பிற்காலச் சமய ஆர்வத்திற்கு நாவலர் பிறந்து வாழ்ந்த சூழல் எத்துணை தூரம் பங்களித்து இருந்ததென்பதை நாம் உணர முடிகிறது.

## நாவலரின் வாழ்விற் கல்விச் சூழல்

நாவலர் பெருமான் புலமைமிக்க புலவர்களிடம் தமிழையும் வடமொழியையும் ஐயந்திரிபறக் கற்றவர். மிக ஆற்றலுடைய தம் சகோதரனை ஆங்கிலக் கல்வி கற்பித்து மேதாவி ஆக்க வேண்டுமென அவரின் சகோதரர்கள் விரும்பினார்கள். இன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரி இருக்கும் வளாகத்தில் அன்று பீற்றர் பார்சிவல் பாதிரியாரது தலைமையில் ஆங்கிலப் பாடசாலை இயங்கியது. அப்பாடசாலையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியது. இப்பாடசாலையில் ஆங்கிலத்தைக் கற்ற நாவலர் மிகச் சிறந்த புலமைமிக்க மாணவனாக அதிபரால் அடையாளங் காணப்பட்டார். இவர் மேல்வகுப்பு மாணவனாக விளங்கும் வேளையிலே இரு மொழிப் புலமைமிக்க இவரைக் கீழ் வகுப்பிற்கு ஆங்கிலம் படிப்பிக்கவும், மேல் வகுப்பிற்குத் தமிழ் படிப்பிக்கவும் அதிபர் வாய்ப்பை ஏற்படுத்தினார்.

பாதிரியாருடைய வேண்டுதலுக்கு மதிப்பளித்து எவ்வித வேதனமும் பெறாது இவர் ஆசிரியப் பணியிற் சிறப்புற்று விளங்கினார். பொதுவாகப் பாதிரியாரின் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுபவர்கள் ஞானஸ்த்தானம் பெற்றுக் கிறிஸ்தவர்களாக மாறித் தமது பெயரையும் மாற்றி வேதனம் பெறும் மரபு இருந்தது. நாவலருக்கு மட்டும் பாதிரியார் இவ்விடயத்தில் விதிவிலக்களித்திருந்தார். நாவலர் பெருமான் தான் கற்ற பாடசாலையிற் கல்வியை மட்டுங் கற்கவில்லை. கிறிஸ்தவ மிஷனரிகளின் கட்டுக் கோப்புக்கள், அவர்களின் திட்டமிடல்கள், ஒழுக்க கோவைகள், அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் போன்றவற்றைப் பரிபூரணமாக அறிந்தார். பிற்காலத்தில் நாவலர் செய்த பணிகளுக்கு இங்கு இவர் பெற்ற அறிவும் பேருதவியாகிய என அறிஞர்கள் கருத்துக் கூறுவர். திண்ணைப் பள்ளிச் சம்பிரதாயத்திலிருந்து வேறுபட்ட சூழலை நாவலர் ஆங்கிலக் கல்வி கற்கச் சென்ற இடத்திற் கண்டு கொண்டார். ஏடுகளோடும், எழுத்தாணிகளோடும் பழகிய நாவலர் ஆங்கிலப் பாடசாலையில் வெளிநாடுகளிற் பதிக்கப்பெற்ற ஆங்கிலத்திலமைந்த, அச்சிற் பதிப்பிக்கப்பட்ட நூல்களைப் படிக்கும் வாய்ப்பும் பெற்றதோடு சில நவீன கல்விமுறைகளையும் இக்காலத்தில் அறிந்து கொண்டார்.

## சைவப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்ற சிந்தனை

பார்சிவெல் பாதிரியாரின் மாணவனாக விளங்கிய நாவலரிடம் பாடசாலை முடிந்த வேளையில் ஆங்கில மொழி மூலம் தமிழ் கற்கப் பாதிரியார் விரும்பினார். தனது அதிபருக்குத் தமிழைக் கற்றுக் கொடுப்பதில் ஆர்வங் கொண்ட நாவலர், பாடசாலை விட்ட பின்பு நீண்ட நேரம் தமிழ்

கற்பித்தார். இவரது திறமையைக் கண்ட பாதிரியார் இவரைப் பயன்படுத்திக் கிறிஸ்தவர்களின் பிரதான நூலாக விளங்கும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று திட்டமிட்டார். மிஷனரிமார்கள் சுதேசிகளைச் சமயம் மாற்றுவதற்கு இக்காலத்தில் தீவிர முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். ஏழைகளுக்கு உடுபுடவை, வேறு சில வசதிகளைக் கொடுத்து மதம் மாற்றினர். உத்தியோகங்களை வழங்கியும் மதம் மாற்றினர். ஆங்கிலேயர் காலத்தில் மட்டுமல்ல அவர்களுக்கு முன்பிருந்த ஒல்லாந்தருடைய காலத்திலும் பலர் உத்தியோகத்திற்காகவும், கல்விக்காவும், பகலிற் கிறிஸ்தவர்களாகவும், இரவு வீடு வந்து பின் திருநீறு பூசிய சைவர்களாக விளங்கினர் என்பதைப் பலரது நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. ஆங்கிலப் பாடசாலைகளிற் காலைப் பிரார்த்தனைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பைபிளையும், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பாடல்களையும் பயன்படுத்தி வந்தனர். ஆரம்பத்தில் ஆங்கிலங் கற்கச் சென்ற மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் வாசிக்கப்படும் பைபிள், அவற்றின் பொருள் எதுவுமே விளங்காது. நாளடைவில் அவர்கள் விளங்கிக் கொள்வார்கள். சுதேசிகளை மதம் மாற்றி மதப் போதகர்களாகப் பாதிரிமார்கள் நியமித்தனர். அவர்கள் பைபிளைக் கையிலெடுத்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று பைபிளை ஆங்கிலத்தில் வாசித்து விட்டுக் கிராமத்து மக்களுக்குத் தமிழில் ஜெபம் செய்தனர். இச்சூழ்நிலையிற் கிறிஸ்தவர்கள் கைப்பற்றிய நாடுகளில் எல்லாம் அந்நாடுகளுக்குரிய மொழியில் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டு மக்களிடம் போய்ச் சேர்ந்திருந்தது. இந்த மண்ணிலும் பைபிள் மக்களிடம் போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணத்திற்கும், சுதேசிகள் போதகர்களாகச் செயற்படுவதற்கும் பைபிளின் மொழிபெயர்ப்பு அத்தியாவசியம் என்பதனை மிஷனரியினர்

நன்குணர்ந்தனர். பார்சிவல் பாதிரியார், பைபிளைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு நாவலர் பொருத்தமானவர் என்பதை அவரிடம் தமிழ் கற்ற போது உணர்ந்து கொண்டார்.

நாவலருக்கு அதிபராக விளங்கிய பார்சிவல் பாதிரியார் நாவலரைச் சென்னைக்கு அழைத்துச் சென்று பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு பணித்தார். 1841 ஆம் ஆண்டு முதல் பார்சிவல் பாதிரியாருக்கு ஒரு தமிழ்ப் பண்டிதராகப் பணி செய்த நாவலரிடம் தங்கள் பைபிளை மொழிபெயர்க்குமாறு கொடுத்த பொறுப்பை நாவலர் மிகச்சிறப்பாக ஆராய்ந்து நிறைவேற்றினார். நாவலர் விவிலிய நூலாகிய பைபிளை மொழிபெயர்க்கும் போது கிறிஸ்தவ வேதாகம நூல் என மொழிபெயர்த்தார். நூலின் பக்கங்களுக்குத் தமிழ் இலக்கங்களையே பயன்படுத்தினார். அன்றைய சூழலில் இலக்கண வழு இல்லாத தூய்மையான எளிய நடையை முதன் முதலில் தமிழிற் கையாண்டார். சென்னையில் இரவு பகலாக மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டார். அச்சுக்கோர்க்கும் இடத்தில் நின்றே அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவினார். நாவலரின் பைபிள் மொழி பெயர்ப்பில் அவர் உருவாக்கிய அழகான சொல் நடைகளை இன்றுங் கிறிஸ்தவ மதப் போதகர்கள் கையாள்வதை நாம் காணலாம். பரிசுத்த ஆவி, கர்த்தர், அவருடைய நாமம், தேவன், துதியுடன் ஜெபம் செய்வோம் போன்ற பல சொற்பிரயோகங்கள் கிறிஸ்தவர்கள் நாவலரிடமிருந்து பெற்றவையே. நாவலர் மொழிபெயர்த்த பைபிளில் இருந்து ஒரு பந்தியை உதாரணமாக நாம் சிந்திக்கலாம்.

> ‘பூலோகத்தாரே நீங்களனைவரும் யெகோவாவை நோக்கி ஆனந்த முழக்கமிடுங்கள், மகிழ்ச்சியோடே யெகோவாவுக்கு ஆராதனை செய்யுங்கள்.

துதிபாடிப்பாடி அவர் சந்நிதியிற் செய்யுங்கள். யெகோவாவே தேவன். நம்மைச் சிருட்டித்தவர். அவர், நாமல்ல; நாம் அவர் சனம்; அவர் மேய்க்கும் ஆடு; இதை உணர்ந்து கொள்ளுங்கள்; துதியுடனே அவர் வாசல்களிலும் வாழ்த்துதலுடனே அவர் பிரகாரங்களிலும் பிரவேசியுங்கள். யெகோவாவே தயாபரர்; அவர் தயை என்றுமுள்ளது; அவர் சத்தியம் தலைமுறை தோறும் நிற்கும். ஆதலால் அவரைத் துதித்து அவருடைய நாமத்தை வாழ்த்துங்கள்''

நாவலர், பைபிளை மொழிபெயர்த்து அச்சேற்றுங்காலத்தில் சென்னையில் வேறொருவரும் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்ததாக அறிகிறோம். பார்சிவேல் பாதிரியாருக்குத் தான் வெளியிடவுள்ள பைபிளைச் சமூகம் ஏற்குமா? என்ற ஐயம் இருந்தது. தமது கிறிஸ்தவ சபையார் சென்னையில் மொழிபெயர்க்கப்படும் பைபிளை ஆதரித்து நாவலர் மூலம் தான் வெளியிடும் பைபிளைப் புறக்கணித்து விடுவார்களோ என்ற ஐயம் அவருக்கிருந்தது. இதனால் நாவலரின் பைபிளை அச்சேற்றுவதற்கு முன் சென்னையிலுள்ள கிறிஸ்தவ சபையினர் ஒப்புவிப்பதற்கு முயன்றார். இவ்வேளையில் நாவலரையும் உடனழைத்துச் சென்றார். சென்னையில் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணத்து மொழி பெயர்ப்புத் தவறென வாதிட்டனர். இதனால் ஒரு குழப்பநிலை ஏற்பட்டது. சென்னையிற் சிறந்த பண்டிதராக விளங்கிய மகாலிங்க ஐயர் என்பவரைத் தீர்ப்பாளராக நியமித்து இரு பைபிள் மொழி பெயர்ப்பையும் ஆராயுமாறு மிஷனரியினர் பணித்தனர். மத்தியஸ்தராகப் பணியாற்றிய பண்டிதர் வித்துவான் மகாலிங்கையர் நாவலருடைய மொழிபெயர்ப்பே சிறந்த தமிழ்மொழி

பெயர்ப்பென்றும், யாழ்ப்பாணத்தில் இத்தகைய சிறந்த தமிழ்மொழி பெயர்ப்புத் துறையினர் உள்ளனரோ என்று ஆச்சரியத்துடன் பாராட்டியதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனால் பார்சிவல் பாதிரியார் அவர்களுக்கு நாவலர் மீதிருந்த அன்பு பன்மடங்காகியது. நாவலரால் நாவலரின் ஆங்கில ஆசான் பெருமை பெற்றார். பார்சிவேல் பாதிரியாரின் முயற்சியால் மொழிபெயர்க்கப்பட்ட பைபிள் நூல்கள் பாய்க்கப்பலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. யாழ்ப்பாணத்திற் கிறிஸ்தவப் பாடசாலைகளிற் தமிழிற் பிரார்த்தனை தொடங்கியது. இது மட்டுமன்றிச் சமயம் பரப்பும் பிரசாரகர்கள் கைகளில் தமிழில் எழுதப்பட்ட பைபிள்கள் தாராளமாக வழங்கப்பட்டன. இவர்கள் யாழ்ப்பாணத்துப் பட்டி, தொட்டி, குச்சொழுங்கை அனைத்துப் பகுதிக்கும் தமிழ் பைபிளைக் கொண்டு சேர்த்தனர். நோயாளர்களுக்குத் தமிழ் பைபிளை இலவசமாகக் கொடுத்து இதைப் படித்துக் கும்பிடுங்கள் நோய் மாறும் என்று கூறி அவர்களை மதம் மாற்றுகின்ற வேலையைச் சுலபமாகச் செய்தனர். நாவலர் இச் சூழலைக் கண்ணுற்றார். மிகவுங் கவலையுற்றார். தன்னையே தந்திரமாகப் பயன்படுத்தித் தான் சார்ந்த சமயத்தவர்களை மறுசமயத்திற்கு மாற்றுகிறார்களே என வேதனைப்பட்டார். நாவலரிடம் நேர்மையும் அதே வேளையிற் சில பிடிவாதமும் இயல்பாகவே அவரிடமிருந்தன. நாவலரைத் தமிழ்ப் பண்டிதராகப் பாடசாலையில் அவரது ஆசான் பார்சிவேல் பாதிரியார் நியமித்த போதும், அதற்குப் பின்னரும் நாவலர், பார்சிவேல் அவர்களுக்குப் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எக்காரணங்கொண்டும் என்னை மதம் மாறச் சொல்லக் கூடாது.

திரிபுண்டரமாக யான் திருநீறு அணிந்து வருதை யாருந்தடுக்கக் கூடாது.

இதுபோற் சில விடயங்களை நாவலர் சொல்லிக் கொண்டே தன் பணிகளைத் தொடர்ந்துள்ளார். நாவலரின் போக்கறிந்த பார்சிவல் பாதிரியார் இவரது நிபந்தனைகளைச் செவிமடுத்தார். இவரைப் பயன்படுத்திப் பல காரியங்கள் செய்யலாம் எனப் பொறுத்திருந்தார்.

## வேதக்காரர்

கிறிஸ்தவர்களை யாழ்ப்பாணத்தில் வேதக்காரர்கள் என்று சொல்லும் வழக்கம் இன்று நிலவுகிறது. இதற்கு என்ன காரணம் என ஆராய்ந்தால் நாவலர் மொழிபெயர்த்துக் கொடுத்த பைபிளை மதப்பிரசாரகர்கள் ஊர்தோறுங் கொண்டு போனார்கள். நாவலர் மொழிபெயர்ப்பின் போது, சைவ மக்களுக்கு முதல் நூல்வேதம், சிறப்புநூல் ஆகமம், வேதம், ஆகமம் என்பது பொதுவாக முதனூலையும் சிறப்பு நூலையும் தமிழிற் கருதுவது மரபு. நாவலர் கிறிஸ்தவர்களுக்கு முதல் நூலாகவும் சிறப்பு நூலாகவும் உள்ள பைபிளை மொழி பெயர்க்கும் போது முன்பக்கத்திலேயே "வேதாகமம்" என்ற சொல்லைப் பயன்படுத்தி விட்டார். இப்போது கிறிஸ்தவர்கள் வேதாகம நூலை வீடு வீடாகக் கொண்டு வந்தனர். வேத நூல்களைக் கொண்டு வருபவர்களை வேதக் காரர்கள் என்று கிராமத்து மக்கள் உச்சரிக்கத் தொடங்கினர். உண்மையில் வேதத்தின் சொந்தக்காரர்கள் சைவ மக்கள். பைபிளின் மொழி பெயர்ப்பு வேதக்காரர் கிறிஸ்தவர்கள் என்ற சூழலைத் தோற்றுவித்தது. இதனைக் கற்றறிந்தவர்கள் உணர்வர். நாவலர் பெருமான் பாடசாலைகளிலும் வீடுகளிலும் கிறிஸ்தவர்கள் திட்டமிட்டு மதம் மாற்றுவதையும் எமது பாரம்பரியங்களை இல்லாமற் செய்வதற்காக முயற்சிகளைக் கண்டு மிகவும் கவலையுற்றார். சைவத்தையும், தாய்மொழியாம் தமிழையும்

சுதேசிகளின் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். கிறிஸ்தவ பாடசாலையில் ஆசிரியர் பணி ஆற்றுவதை விட ஓர் சைவத் தமிழ்ப் பாடசாலையை நிறுவி மதமாற்றத்திலிருந்து எம் சமூகத்தைக் காக்க வேண்டும் என மிக இளம் வயதில் முடிவு செய்தார். தனது ஆசிரியப் பதவியைத் திடீரென இராஜினாமாகச் செய்தார். பார்சிவெல் பாதிரியார் திடுக்குற்றார். இவரை வெளியே விட்டாற் தமக்கும், தம் கொள்கைக்கும் ஆபத்து எனக் கருதினார். வாய்மொழி மரபாக இன்றும் நாவலர் பற்றிய செய்திகள் மூதாதையர் வழியாகப் பேசப்படுகிறது. பார்சிவல் பாதிரியார் நாவலரைத் தேடி அவர் வீட்டுக்கு வந்ததாகவும், நாவலர் ஆசிரியப் பணிக்குச் செல்ல மறுத்ததாகவும், இருவரும் கடுமையாகத் தர்க்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அத்தர்க்கம் பற்றிப் பல்வேறு செய்திகள் செவிவழியாகவே இன்று வரை பேசப்படுகிறது. 1846 இற்கு முதல் காலையிலும் இராத்திரியிலும் பேர்சிவலின் பாடசாலையில் அயராது உழைத்த நாவலர் வேலையை இராஜினாமாச் செய்த செய்தி அவரது சகோதரர்களிடத்துக் கோபத்தை உண்டாக்கியது. நாவலரது தமையன்மார் நாவலரை உத்தியோகம் பார்க்குமாறு வேண்டினார். நாவலர் மறுத்தார். வீட்டுக்குள் குழப்பம். இந்நிலையிலும் நாவலர் சைவ சமயப்பணி ஆற்றுவதற்கு முன்வந்தார். ஆங்கிலம் கற்றவர்களுக்கு அரச உத்தியோகங்கள் வழங்கப்பட்ட காலத்தில் அப்பதவிகளை ஏற்க மறுத்தார். நாவலர் வயதை ஒத்தவர்களுக்கு வேலையும் சீதனங்களோடு திருமணமும் நடைபெற்றன. நாவலரது உறவினர்கள் நாவலரை உத்தியோகம் பார்க்குமாறும், திருமணம் செய்யுமாறும் வலியுறுத்தினர். இவற்றை மறுத்த நாவலர் 1846 முதல் சில இளைஞர்களை அழைத்துக் காலையிலும் இராத்திரியிலும் இலவசக் கல்வி வழங்கத் தொடங்கினார். கல்வியினாலேயே

எங்கள் சமயத்தையும் மொழியையும் காப்பாற்ற முடியும் என்பதை நாவலர் உணர்ந்தார். விரைவில் ஓர் பாடசாலையை நிறுவ வேண்டுமென்ற ஆதங்கம் அவர் அகத்திலே நிறைந்தது. இதன் வினாவே வண்ணார் பண்ணையில் முதலாவது சைவத் தமிழ்ப் பாடசாலை சுதேசிகளுக்காகத் தோற்றம் பெற வித்திட்டது.

## நாவலரின் ஆன்மீகப் பிரசங்கப் பணி

சமய விடயங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் இயற்றுறை சார்ந்த இப்பணியைப் பிரசங்கம் என அழைக்கும் வழக்கம் இருந்தது. பிரசங்கம் என்பது வடமொழிச் சொல்லாகும். இதனை இன்று சொற்பொழிவு, கதாப்பிரசங்கம், சமயவுரை, உபந்நியாசம் எனப் பல சொற்களைப் பயன்படுத்தி வழங்குகின்றனர். யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவர்கள் மதம் சார் உரைகளைத் தேவாலயங்களில் வழங்கிக் கொண்டிருந்த காலத்தில் எமது சைவ ஆலயங்களிலும் பக்தர்களுக்குச் சமய விடயதானங்களை எடுத்துரைக்க வேண்டும் என நாவலர் விரும்பினார். வைத்திலிங்கச் செட்டியாராற் கட்டுவிக்கப்பட்ட வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் நாவலர் காலத்திற் பிரசித்தம் பெற்றிருந்தது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக அனுமதி பெற்றுக் கோயிலை உருவாக்கிய செட்டியார் தனவந்தராக விளங்கினார். இவ்வாலயத்தை விரும்பி வழிபடச் சென்ற நாவலர் அறங்காவலர் அனுமதியுடன் 1847 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் நாள் முதன் முதலாக ஆலய மண்டபத்திற் சமயப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். இவரது சமயப் பிரசங்கம் மக்களைக் கவர்ந்தது. ஒவ்வொருவெள்ளிக் கிழமைகளிலும் மாலையில் நாவலரது பிரசங்கம் சிவன்கோயிலில் இடம்பெற்றது. இவரது

பிரசங்கத்தைக் கேட்பதற்கு ஆலயத்திற்கு மக்கள் திரள்திரளாக வருகை தந்தனர். இவரது பிரசங்கம் பெரிய புராணத்தில் வரும் அடியவர்களைப் பற்றியும், சிவபூசையின் மகத்துவம் பற்றியும், அற ஒழுக்கம் பற்றியும், ஒழுக்க நெறிகள் பற்றியும் போதித்தன. நாவலரின் உரையைக் கேட்டுப் பலர் சிவதீட்சை பெற்றனர். ஆலய தரிசனம் செய்பவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது. கிறிஸ்தவ மிஷனரியினர் இச்செய்தி அறிந்து நாவலரின் பிரசங்கத்தைக் குழப்புவதற்குச் சில வழிகளைக் கையாண்டனர். மானிப்பாயிலிருந்து மிஷனரியினால் வெளியிடப்பட்ட 'Morning Star" (தமிழில் உதயதாரகை) என்ற பத்திரிகையில் நாவலரையும் நாவலரது சமயக் கருத்துக்களையும் நளினஞ் செய்து தர்க்க ரீதியாக எதிர்வாதம் செய்தும் பிரசுரித்தனர். இதனால் நாவலர் பெருமான் மேலும் வீறுகொண்டெழுந்தார். நாவலர் சமயப் பிரசங்கம் செய்த சிவன்கோயிலில் நாவலரது பாடசாலை மாணவனாக விளங்கிய நல்லூர் வேங்கடாசல ஐயர் கார்த்திகேய ஐயரும் மாறி மாறிப் பிரசங்கம் செய்தனர். ஒருமுறை ஐயர் பிரசங்கம் செய்ய வேண்டிய நாள். ஐயர் திடீரென்று கோயிலிருந்த நாவலரை அழைத்து எனது தாயாருக்குக் கடுஞ் சுகயீனம். நானின்று பிரசங்கம் செய்ய முடியாதுள்ளது. நீரே இன்று பிரசங்கம் செய்ய வேண்டும் என்று கூறிச்சென்றுவிட்டார். நாவலர் ஒவ்வொரு வாரமும் தனது பேச்சை மிகவும் தயார் செய்து பேசுபவர். இன்று திடீரெனப் பேசவேண்டிய சூழல் ஏற்பட்டது. 'ஆயத்தமில்லை' என்ற தலைப்பைச் சொல்லிப் பேசத் தொடங்கினார். அத்தலைப்பில் நின்று அவர் ஆற்றிய உரை பலரை வியப்படையச் செய்தது. ஆயத்தமில்லை என்ற சொல்லைக் கொண்டு யாம் எவரும் மரணத்தைச் சந்திப்பதற்கு ஆயத்தமில்லை என்ற கருத்துப்பட மிக ஆழமாக உரையாற்றினார். பொன்னும் பொருளும் போக சுகங்களிலும்

மூழ்கி இருக்கின்றோமே ஒழிய இனிப் பிறவா நிலையை அடைவதற்கு யாம் என்ன ஆயத்தம் செய்தோம் என்ற ஒரு கேள்வியைச் சபையில் எழுப்பினார். இப்பிரசங்கம் தொடங்கும் போது ஒரு விடயத்தை முன்வைத்தனர். அவ்விடயமும் மிகவும் சுவையானது.

இங்கிலாந்தில் ஒரு பரீட்சை மண்டபத்தில் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு விடயம் எழுதும்படி காகிதத்தில் அச்சிட்டுக் கொடுத்தார்கள். ஒரு மாணவருக்கு எவ்வித விடயமும் அற்ற வெற்றுத்தாள் கிடைத்தது. அம்மாணவர் வெற்றுத்தாளைப் பார்த்துவிட்டு சூனியத்திலிருந்து கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தார் என்று ஒரு கட்டுரையை எழுதினான். விடயங்கள் கொடுத்து எழுதியவர்களின் கட்டுரையை விட வெற்றுத்தாளைப் பயன்படுத்தி எழுதிய கட்டுரை பிரபல்யம் பெற்றது என நாவலர் சுவாரஸ்யமாக எடுத்துரைத்தார். நாவலரின் ஆயத்தமில்லை என்ற பிரசங்கம் சிவன் கோயிலுக்கு வந்த கற்ற சமூகத்தைப் பெரிதும் உவக்க வைத்தது. நாவலரின் சமயப் பிரசங்கம் மக்கள் மனதைக் கவர்ந்தது. யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் மாமிசமுண்டவர்கள் சைவ போசனமாக மாற்றம் பெற்றனர். பல ஆலயங்கள் சைவாகம விதிமுறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்களை மீண்டும் கட்டவேண்டும் என்ற சிந்தனை நாவலரது பிரசங்கத்திலும் துண்டுப்பிரசுர வெளியீடுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டன. இதனால் தூர்ந்து போன பல ஆலயங்களைக் கட்டத் தொடங்கினர். கோயில்களில் புராணப் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுங்கள், பஞ்ச புராணத்தைப் பாடுங்கள், வேள்விகளைத் தடுங்கள், ஆசாரமாக வழிபாட்டுக்குச் செல்லுங்கள் என நாவலர் தமது உரையூடாகச் செய்த பிரசாரம் பாரிய மாற்றத்தை எம்மண்ணில் உருவாக்கியது.

## திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நாவலர் விருது

1849 ஆம் ஆண்டு சைவத்தமிழ் நூல்களைக் காப்பாற்றுவதற்கு அச்சியந்திரம் தேவை என நாவலர் கருதினார். அதற்காக இந்தியா சென்றார். நாவலரின் பேராற்றல் தொடர்பாகப் பல அறிஞர்கள் அறிந்திருந்தனர். வேதாரணியத்தில் நாவலரை மேளதாளத்துடன் வரவேற்று உரையாற்றுவித்தனர். இக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் நாவலரை அழைத்து உரையாற்றுமாறு வேண்டினார்கள். நாவலரின் உரைச் சிறப்பைக் கண்டு 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி நாவலரைப் பெருமைப்படுத்தினர். அன்று முதல் இந்தியாவில் நாவலர் மிகவும் பிரசித்தம் பெற்றார். நாவலரது திருவாவடுதுறை ஆதீனக் கௌரவிப்பு ஈழத்திற்குப் பெருமை தந்தது. அச்சியந்திரத்தை வாங்கச் சென்ற நாவலர் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் பல சான்றோர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நாவலரது பிரசங்கப்பணி மேலும் சிறப்புற்றது. மூன்றாவது தடவையாக 1854 இல் இந்தியா சென்ற நாவலர் பல இடங்களில் உரையாற்றிய பாராட்டுப் பெற்றார். நாலாவது தடவை 1858 ஆம் ஆண்டு சென்று உரையாற்றினார். 1862 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் சைவப் பாடசாலை உருவாக்க வேண்டும் என்ற தலைப்பில் யாழ் வண்ணார் பண்ணையில் தான் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் நீண்டதோர் பிரசங்கம் செய்தார். 1862 ஆம் ஆண்டு ஆடிமாதம் சிதம்பரம் சைவப்பிரகாசப் பாடசாலை நிறுவுவதன் பொருட்டுப் பருத்தித்துறைச் சித்தி விநாயகர் கோயிலில் தொடர் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கம் வடமராட்சியில் ஓர் புத்தெழுச்சியை ஏற்படுத்தியது எனப் பல வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாவலர் பருத்தித்துறைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆற்றிய உரையைக் கால்நடையாக வந்து

தினமும் கேட்டவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர். இவர் நாவலரின் சொற்பொழிவு நிறைவு பெற்றதும் ஒரு வாழ்த்துப் பாவினைப் பாடினார். அப்பாடலில் பிரசங்க மாமழை என்று விழித்துப்பாட வெளியே ஓவென்று மழை பெய்ததாகவும், நாவலர் இளைஞராகிய சிவசம்பு அவர்களைச் சிவசம்புப் புலவரே என விழித்தாராம் என வரலாறு கூறும். சிவசம்புப் புலவர் பாடிய பாடலில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

*'அன்பர் கண்ணீர் மழையுஞ் சிவனார் மெய்யருள் மழையும்*
*மன்பரந்த மழையும் பிரசங்க மாமழையும்*
*கொன்புனை நீலப் புயலின் மழையும் கொடை மழையும்*
*இன்பொடு மல்கப் புலோலி மெய் வாழ்வினிலேறியதே*

எனக் குறிப்பிடும் பாடலடிகள் முக்கியத்துவம் பெறுகிறது. நாவலர் 1864 தை மாதம் இந்தியா சென்று சிதம்பரம் சைவப் பாடசாலையை ஸ்தாபிக்கும் பணியோடு பல இடங்களில் சமயச் சொற்பொழிவும் ஆற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் தொண்டை நாட்டுப் பகுதியிலுள்ள பல திருத்தலங்களில் நாவலர் பல பிரசங்கங்கள் செய்துள்ளார். ஆனால் அவர் உரையாற்றிய திருத்தலங்கள் பற்றிய விடயங்கள் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. 1870 மாசி வரை ஆறு வருடங்கள் சிதம்பரத்திற் தங்கியிருந்த நாவலர் அங்கு பல சமயப் பணிகளை நிலைநாட்டினார். அக்காலப் பகுதிகளில் அவரது சமயப் பிரசங்கங்கள் தொடர்பான சரியான பதிவுகள் இல்லாமற் போனது நாம் செய்த தவக் குறைவே. 1870 முதல் 1879 ஆடி மாதம் வரை பல பிரசங்கங்களை யாழ்ப்பாணத்தில் நாவலர் நிகழ்த்தி உள்ளார். அவரது இறுதிப் பிரசங்கம் 1879 ஆடி மாதம் சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூஜை நன்னாளில் அமைந்தது. இப்பிரசங்கம் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 'பொன்னும்

பொருளும் தருவானை' என்னும் சுந்தரமூர்த்திகளின் தேவாரத்தை அடிப்படையாகக் கொண்டு அவரது இறுதிப் பிரசங்கம் அமைந்திருந்தது. அவரது இறுதிப் பிரசங்கத்தின் போது சனங்களை விழித்துப் பின்வருமாறு கூறினார்.

> 'நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருஷகாலம் உங்களுக்குச் சைவசமயத்துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயங்குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போலவே படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கொண்டு கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ணமாட்டேன்."

என்னுங் கருத்துப்படவுரைத்தார். அன்றைய கடைசிப் பிரசங்கம் கேட்டுப் பலரும் கண்ணீர் விட்டழுதனர். அவர் குறிப்பிட்டது போல அப்பிரசங்கம் நடைபெற்று ஒரு சில மாதங்களில் நாவலர் இறைபதம் எய்தினார்.

## நாவலர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட கல்விச்சாலைகள்

எமது சமய நெறிமுறைகளையும் நீதி சாஸ்திர நூல்களையும் இலக்கிய இலக்கணங்களையும் அறிவியல் விடயங்களையும் கற்பதற்கு ஓர் இலவசப் பாடசாலையை உருவாக்க வேண்டும் என நாவலர் சிந்தித்தார். மிஷனரியின் பாடசாலைகளுக்கு நிகராக எமது பண்பாட்டைப் பேணுவதற்குப் பாடசாலையைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதை நன்றாக உணர்ந்தார். 26 வயது நிரம்பிய இளைஞன் ஒருவன் 19ம் நூற்றாண்டில் இந்தளவு தூரம் சிந்தித்தமை நாம் செய்த பாக்கியமே. 1848 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஐந்தாம் நாள் யாழ்ப்பாணத்திலே வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் முதலாவது பாடசாலையை நாவலர் தோற்றுவித்தார். இதுவரை வீட்டுத் திண்ணைகளிலும் மடங்களிலும் மர நிழல்களிலும் நடைபெற்ற சைவத்தமிழர்களின் கல்விப் பாரம்பரியம் பாடசாலை என்ற நியதிக்குட்பட்டு நேர அட்டவணையுடன் இப்பாடசாலை தோற்றம் பெற்றதென்பது உன்னத வரலாறாகும். நாவலரின் பாடசாலை தோற்றம் பெற்றதென்பது உன்னத வரலாறாகும். நாவலரின் பாடசாலை தோற்றம் பெற்ற போது அதற்கோர் சாதகக் குறிப்பு எழுதப்பட்டிருந்தது. நல்லூர் த.கைலாசபிள்ளை எழுதிய நாவலர் சரித்திர நூலில் நாவலர் பாடசாலையின் சாதகத்தைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி | சனி |
| | யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை அம்ச சக்கரம் | | சுக் கேது |
| ராகு புத | | | |
| லக் ச-கு | | செவ் | |

| | | | |
|---|---|---|---|
| கே சந் | | | |
| சனி | யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை இராசிச்சக்கரம் | | புத குரு |
| | | | சூரி சுக் செவ் |
| | லக் | | ராகு |

கிறிஸ்தவ மிஷனரிக்குச் செல்லும் மாணவர்கள் திருநீற்றை அழித்துவிட்டுச் செல்வதும் அங்கு மதச் சுதந்திரமின்றி அவர்களின் பிரார்த்தனையில் ஈடுபடுவதும் அப்பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெறுபவர்கள் ஞானஸ்தானம் பெற்றுத் தமது பிறவிப் பெயரை மாற்றுவதும் நடைமுறையில் இருந்தது. இந்நிலையைப் போக்க எம்மத்தியிற் துணிந்த ஒரு இளைஞன் பாடசாலையை ஸ்தாபித்தான் என எண்ணும் போது உள்ளம் பூரிப்படைகிறது. எம்மண்ணில் இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்பட வேண்டியவர் நாவலரே. பாடசாலையை முழுமையாகக் கட்டுவதற்குக் கையிற் பணமில்லை. பாடசாலை நிர்வகிப்பிற்கான நிதி எதுவும் கையிலில்லை. இவ்வேளையிற் தன்னிடம் முன்பு கற்ற மாணவர்களையும் பயன்படுத்திப் பிடியரிசி எடுத்து வீடு வீடாக அலைந்து தன் எண்ணத்தை நிலைநாட்டியவர் நாவலர். நாவலரின் வாழ்வு இன்று நினைத்துப் பார்க்க முடியாது. பாடசாலையை நிர்வகிப்பதற்குப் பணம் இல்லாமல் தனது நித்திய பூசையிலே நாவலர் மனமுருகி அழுதுள்ளார்.

## நாவலர் பெருமான் பாடசாலை நிறுவ அழுது இறைவனிடம் வேண்டிய வார்த்தைகள்

தனது நித்திய வழிபாட்டின் போது நானுருவாக்கிய பாடசாலையை வளர்ப்பதற்குப் பரம்பொருளிடம் வேண்டுதல் செய்து விம்மியழுது விண்ணப்பித்த செய்யுள்.

'மணிகொண்ட கடல்புடைகொ ளிந்நாட்டி லுன்சமய
வர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம்
மைப்பொருட் பேறொ ழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பின. துனையிகழு
மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனஞ் சற்பகற் றுயருற
லறிந்துமொரு சிறிது மருளாத்
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்விடுத
றிண்ணநீ யறியா ததோ
சிறியனே தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச்
சிற்றம் பலத் தெந்தையே"

மேற்கூறப்பட்ட பாடலாகும். இச்செய்யுளின் பொருளை விளங்கிக் கொண்டவர்கள் நாவலரை விளங்கிக் கொள்வர். உரிமையோடு இறைவன் உணர்வுகளினால் மன்றாடுங் காட்சி மனத்தை உருக்குகிறது. பலரும் கடவுளிடம் தம் சுயநலத்திற்காக வரங் கேட்பர். நாவலரோ எம் எதிர்காலச்

சந்ததிக்காக எவ்வாறு வரங்கேட்டார் என்பதைக் கற்றவர்கள் உணர்வர். இப்பாடலில் ‘கயவர் செய்யும் இடர்கள் கண்டும்’ என்றொரு வரி எழுதியுள்ளார். நாவலர் பெருமான் பாடசாலையைத் தோற்றுவித்த வேளை அவருக்கு இடையூறுகள் பலர் செய்தனர் என்பதை எமக்குணர வைக்கின்றது.

நாவலர் பெருமான் வண்ணார் பண்ணையிலமைத்த பாடசாலையை வளப்படுத்துவதற்கு உதவியவர்களில் கொழும்பில் வாழ்ந்த ஶ்ரீமான் இ.நன்னித்தம்பி முதலியார் என்பவர் முக்கியத்துவம் பெற்றுள்ளார். இவர் சேர்.பொன்.இராமநாதனின் தாய்மாமன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சார்ந்தவர். கொழும்பிற் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர். சைவநெறி முறைகளைப் பின்பற்றுபவர். இவரைப் பற்றிக் கேள்விப்பட்ட நாவலர் பெருமான் இவரிடம் உதவி கோரிக் கடிதம் எழுதினார். நன்னித்தம்பி முதலியார் நாவலரைப் பற்றி தனது உறவினர் மூலம் விசாரித்தறிந்து கொண்டார். வாணிபத் தொழிலில் வல்லவராக விளங்கிய நன்னித்தம்பி முதலியார் நாவலரது முயற்சிகளுக்கு உதவ முன்வந்த வேளையில் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளார். யாழ்ப்பாணம் முட்டாஸ் கடைச் சந்தியில் விற்பனையாகவுள்ள மூன்று கடைகளையும் கொள்வனவு செய்து அக்கடைகளில் இரண்டை வாடகைக்குக் கொடுத்து அதனால் வரும் வருவாயை ஆசிரியர் வேதனத்திற்கும், ஏனைய செலவுகளுக்கும் பயன்படுத்தலாம் என அறிவுரை கூறினார். நானூறு ரூபா பணம் நன்னித்தம்பி முதலியார் அவர்களால் நாவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணத்தை ஒரே தடவையில் அனுப்பவில்லை. நாவலர் பெருமான் நன்னித்தம்பி முதலியாரின் உதவியுடன் முட்டாஸ் கடைச்சந்தியில் உள்ள

மூன்று கடைகளையும் கொள்வனவு செய்து தானாரம்பித்த பாடசாலையை விருத்தியுறச் செய்தார்.

நாவலர் பாடசாலை அமைத்த காலத்தில் நாவலருக்குப் போட்டியாக வெஸ்லியன் மிஷன், அமெரிக்க மிஷன், வேறு சில கத்தோலிக்க நிறுவனங்கள் செயற்பட்டன. நாவலரின் பாடசாலையிற் கற்பதால் என்ன பயன்? அரச உத்தியோகம் கடைசிவரை கிடையாது எனப் பிரசாரஞ் செய்தனர். மிஷனரியின் பாடசாலையில் ஆசிரியராகப் பணி செய்த கொண்டிருந்த சுதேசிகள் சிலருக்கு மிஷனரிமார் சில அவசர சலுகைகளை வழங்கினர். அவர்களின் தகுதியை மீறி விருதுகளைக் கொடுக்கத் தொடங்கினர். சிலரை மிஷனரிச் செலவில் இந்தியாவில்ப் பட்டப்படிப்பு மேற்கொள்ள அனுப்பினர். காரணம் இவர்களும் மிஷனரிச் சேவையை விட்டுப் புதிய பாடசாலைகளைத் தோற்றுவிக்காமல் இருப்பதற்குத் திட்டமிட்டனர். தகுதியற்றவர்களுக்கு வித்துவான்கள் எனப்பட்டஞ் சூட்டியதை நாவலர் கண்டித்தார். இவ்விடயந் தொடர்பாகப் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் குமாரநாயகங்காரம் என்ற மடலிலிருந்து தனது நாவலர் பற்றிய ஆய்வுக்கட்டுரையிற் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

> 'வித்துவான் தம்பையாப்பிள்ளை என்றிட்டுக் கொண்டீரே, வித்துவான் என்பதற்குப் பொருள் யாது? வித்துவான் என்னுஞ் சொல்லுற் பத்தியாது? வித்துவானென்னும் பட்டமேற்றற்கு யோக்கியராகும் வண்ணங் கற்றற் பாலனவாகிய நூல்கள் எவை? அந்நூல்கள் நீர் கற்றிருக்கின்றீரா? பட்டந் தந்தவர் யாவர்? பட்டப்பத்திரம் எங்கே? உமக்குப் பட்டம் நீரோ படைத்திட்டுக் கொண்டீரா? அப்பிடியாயின்,

இங்கிலீசுப் புத்தகங்கள் சில நாட்கைக் கொண்டு திரிந்தோரெல்லாம் B.A, B.L, M.A. முதலிய பட்டங்கள் தமக்குத் தாமே படைத்திட்டுக் கொண்டு இறுமாந்து திரியலாமே. பயன் என்னையோ! சிறுவரும் இகழ்தற்கிடனாமே! இங்கிலிசில் இப்படிச் செய்யத் துணிபவர் யாருமில்லையே! தமிழ்க் கல்வியொன்றா பகிடிக் கிடனாயிற்று."

நாவலர் பெருமான் எத்தகைய சவால்களுக்கு மத்தியிற் பாடசாலையை நடாத்தினார் என்பதை நாம் உணரலாம். நாவலர் இப்பாடசாலையை நடாத்திக் கொண்டிருக்கின்ற போது எதிர்காலத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை நிறுவ வேண்டும் எனக் கருதினார். காரணம் ஆங்கில மொழியைக் கற்பதனால் வேலை வாய்ப்பு அதிகம் எனக் கருதும் எம் சமூகத்தை மிஷனரியின் வலைக்குள் அகப்படுத்தாமற் காப்பாற்றுவதற்கு ஆங்கில மொழி மூலம் கல்விச் சாலை அவசியம் என்பதனைச் சிந்தித்தார்.

## வண்ணார்பண்ணைச் சைவாங்கில வித்தியாசாலை

இப்பாடசாலையை 1872 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். சைவப் பண்பாட்டுடன் ஆங்கில மொழி மூலக் கற்கை நெறியை புகட்டுவதற்காக மிகவும் கஸ்ரப்பட்டு ஆரம்பித்தார். பிரித்தானிய அரசு கிராமங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிப்பவர்களுக்கு நிதியுதவி வழங்கியது. ஆனால் நாவலர் ஆரம்பித்த சைவாங்கில வித்தியாசாலைக்கு நிதியுதவி மறுக்கப்பட்டது. நாவலர் பெருமான் மிகவும் கவலைப்பட்டார். நான்கு ஆண்டுகள் மிகவும் அர்ப்பணிப்போடு இப்பாடசாலை நடாத்தினார். மிஷனரியினர் திட்டமிட்டு நாவலரது சைவாங்கில

பாடசாலைக்கருகில் கில்னர் பாடசாலையை இலவச ஆங்கிலப் பாடசாலை ஆக்கினர். நாவலரது ஆங்கிலப் பாடசாலைக்கு நிதி வழங்க முடியாது என்பதற்கு அரசினர் கூறிய சாட்டுப் போக்கு ஏற்கனவே சமீபமாக வேறு ஆங்கிலப் பாடசாலை உள்ளது. எனவே இந்த ஆங்கிலப் பாடசாலைக்கு நிதி வழங்க முடியாது எனவே உமது விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது. 1876 ஆம் ஆண்டு இந்த நாவலரின் ஆங்கிலப் பாடசாலை மூடப்பட்டது. இத்துயரைப் போக்கவே நாவலரின் அபிமானிகள் நாவலர் இல்லாத காலத்தில் 1890 இல் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலையை மீண்டும் நிறுவினர். அப்பாடசாலையே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியாக விளங்குகின்றது.

### சிதம்பரத்தில் உருவாக்கிய சைவப்பிரகாச வித்தியாசாலை

1849 ஆம் ஆண்டு இந்தியாவில் அச்சியந்திரம் வாங்குவதற்காகச் சென்ற வேளை சிதம்பரத் திருக்கோயிலைத் தரிசித்தார். அவ்வேளையில் மிகப் புனிதமாகச் சைவ மக்கள் போற்றும் சிதம்பரத் திருக்கோயிலின் சிறப்பைப் பற்றிச் சிந்தித்தார். தில்லைவாழ் அந்தணர்கள் மிகவும் போற்றுதலுக்கு உரியவர்கள். எனினும் சிதம்பரத் திருக்கோயிற் சூழலில் கல்வி வளர்ச்சி போதாமல் இருந்தது. தில்லைவாழ் அந்தணர்களின் மரபில் வந்த தீட்சிதர் பிள்ளைகள் சமயவிடயங்களைக் கற்பதில் ஆர்வமில்லாமல் இருந்தனர். சைவ மக்களின் கேந்திரநிலையமான சிதம்பரத்திற் சைவம் பாதுகாக்கப்பட வேண்டுமென நாவலர் கருதினார். அச்சியந்திரம் வாங்கச் சென்ற வேளை ஆதீனங்களும், சில மடாதிபதிகளும் இந்தியாவிற் தங்கியிருந்து சமய அறிவை வளர்க்கவேண்டுமென நாவலரை வினவினார். வருங்காலத்தில் ஈழத்திற் சைவப்பிரகாச

வித்தியாசாலை நிறுவியது போல் தமிழ் நாட்டிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவ வேண்டும் என அன்புடன் சில பிரபுக்கள் வேண்டினர். நாவலர் அவர்களது வேண்டுகோளை அகத்திலே இருத்தினார். 1858ஆம் ஆண்டு தனது 36ஆவது வயதில் மீண்டும் இந்தியா சென்றார். இந்தியாவில் சமய நூல்களை அச்சேற்றி வெளியிட்ட சிறப்பினால் பலரது பாராட்டுக்கு ஆளானார். அவ்வேளையில் நாவலரிடம் தமது ஐயங்களைக் கேட்டுப்பலர்தெளிவு பெற்றனர். தருமபுர ஆதீனத்திற் தங்கியிருந்து நாவலர் பிரசங்கங்கள் செய்தார். இராமநாதபுர சமஸ்தானத்துப் பொன்னுச்சாமித் தேவர் நாவலரைச் சந்தித்தார். தமது செலவில் சில நூல்களை நாவலர் மூலம் பதிப்பிக்க முன்வந்தார். திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் வேறுசிலரும் நாவலரோடு தொடர்பு கொண்டனர். இத்தொடர்புகளால் சிதம்பரத்திற் பாடசாலை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் நாவலருக்கு அதிகரித்தது, சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலையை நிறுவுவதற்கும் 14 திட்டங்களைத் தயாரித்துத் தமிழ்நாட்டில் வெளியிட்டார். சிதம்பரத்திற் பாடசாலை நிறுவும் பணிக்கு நாவலர் எதிர்பார்த்ததுபோல் தமிழ் நாட்டில் நிதியுதவி கிட்டவில்லை. நாவலர் யாழ்ப்பாணம் வந்தார். வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு கூட்டத்தை நடாத்தினார். அக் கூட்டத்தில் இப் 14 திட்டங்களையும் பொது மக்களிற்குச் சமர்ப்பித்தார். எப்படியாவது சிதம்பரத்திற் பாடசாலை கட்டவேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்திற் குடி கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் சில அன்பர்கள் சிதம்பரப் பாடசாலைக்கு நிதியுதவி வழங்கினர். இவ்வேளையில் நாவலர் இந்தியாவால் வருகின்றபோது பருத்தித்துறைச் சித்தி விநாயகர் ஆலய அறங்காவலர் செட்டியார் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்களும் நாவலருக்கு உதவ முன் வந்தார்.

அவ்வுதவியைப்பெறும் பொருட்டு செட்டியாரின் ஆலயத்திற் பத்து நாட்கள் தொடர்ந்து பிரசங்கம் செய்தார். ஆலய அறங்காவலர் வழங்கிய காணிக்கை நாவலரது சிதம்பரப் பாடசாலைக்குப் பேருதவியாக இருந்தது. யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோயில் வீதியில் வசித்த வேங்கடாசல ஐயர் அவர்கள் சிதம்பரம் பாடசாலைக்குத் தேவையான பனை மரங்களை இணுவிலில் வைத்துத்தச்சு வேலையை நிறைவேற்றித் தானமாகக் கொடுத்தார். நாவலர் அவற்றைக் கடல் மார்க்கமாகக் கொண்டு சென்று கட்டட வேலையைப் பூர்த்தி செய்தார். பருத்தித்துறை புலோலியில் உள்ள வர்த்தகர்கள் சிலர் தங்கள் வியாபாரத்திலே சிதம்பர வித்தியாசாலை நடாத்துவதற்கென உண்டியல் (மகமை) வைத்து உதவி புரிந்தனர். யாழ்ப்பாணத்தவர்களின் பேருதவியால் தனது 41ஆவது வயதில் 1864ஆம் ஆண்டு சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலர் பெருமான் உயர் நுழைவாயிலும், பள்ளி நடுமன்றம், நான்குபெரிய அறைகள், சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருவுருவமும் மாணிக்கவாசகப் பெருமானின் திருவுருவமும் பாடசாலையின் நடுப்பகுதியில் நிறுவப்பட்டது. 28ஆம் திகதி

| | | | |
|---|---|---|---|
| சந் | கேது | செவ் | |
| | சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை இராசிச்சக்கரம் | | |
| | | | |
| | லக் கு-சு-பு | சூரிய சனி-ரா | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சூரி |
| ராகு | சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை அம்ச சக்கரம் | | புத |
| | | | செவ் கேது |
| | | குரு சனி | |

அவர் தயாரித்த 14 திட்டங்களாவன.

1. சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒரு நிலம் வாங்க வேண்டும்.

2. இந்த நிலத்திலே ஒரு பாடசாலையையும், பூசைக்கட்டு, சாத்திரக்கட்டு, சமையற்கட்டு என்ற மூன்று கட்டுள்ள ஒரு திருமடமும் கட்டுவிக்கவும், சிவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு திருநந்தவனம் வைக்கவும் வேண்டும்.

3. இந்தப் பாடசாலையிலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பால பாடங்கள், நிகண்டு திருவள்ளுவர் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசன நடையிற் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.

4. சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்து சில பிள்ளைகளுக்குத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதவும் சுத்தாங்கமாக ஓதவும் பழகுவிக்க வேண்டும்.

5. திருக்கோயிலிலேனும் திருமடத்திலேனும் நாடோறும் இரவிலே, கேட்போர் யாவருக்கும் பயன்படும் பொருட்டு, இந்த உபாத்தியார்களைக் கொண்டு பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோவிற் புராணம், கந்தபுராணம், உபதேச

காண்டம், வாயு சங்கிதை முதலிய சிவபுராணங் களையும், சிவதருமோத்தரததையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்.

6. சாயங்காலத்திலே சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவபத்திவிளையும் வண்ணம் இந்த ஓதுவார்களைக் கொண்டு சிவசந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும் சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்.

7. தமிழ் நாட்டார் உய்யும் வண்ணம் தமிழ் வேதஞ்செய்தருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும் பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார்நாயனாருக்கும் தமிழ்ச் சித்தாந்தஞ் செய்தருளிய மெய்கண்ட தேவர் முதலிய சந்தான குரவர் நால்வருக்கும் இந்தத் திருமடத்திலே வருடந்தோறும் அவரவர் பரிபூரணத்தகையடைந்தருளிய திருக்ஷேத்திரத்திலே குருபூசை செய்து அவரவர் மகிமையை யாவருக்கும் விரித்துரைக்க வேண்டும்.

8. இந்தப் பாடசாலையிலே கற்றவர்களுள்ளும் பிறருள்ளும் கல்வியொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவர்களுக்குச் சைவாசாரியாரைக் கொண்டு நிருவாண தீக்ஷை செய்வித்து இந்தத் திருமடத்திலே ஞான நூல்களாகிய சைவ சித்தாந்தசாத்திரங்களைப் படிப்பிக்க வேண்டும்.

9. சிதம்பராலயத்திலே கட்டளை வைத்திருக்கும் மகிமை பொருந்திய மடாதிபதிகளும், பிரபுக்களும் நாடோறும் தங்கள் தங்கள் கட்டளையன்னத்திலே சிறிது இந்தத் திருமடத்துக்குக் கொடுப்பிப்பார்களாகில் அந்த

அன்னத்தை இங்கே படிக்கும் துறவிகளுக்கும் வறியவர்களுக்கும் உபயோகப்படுத்த வேண்டும்.

10. இங்கே படிக்கும் மாணாக்கர்கள் கற்ற கல்வியை வருஷந்தோறும் மடாதிபதிகளும் வித்துவான்களும் பிரபுக்களும் கூடிய சபையிலே பரீக்ஷை பண்ணவேண்டும்.

11. வருஷந்தோறும் இந்தத்தருமத்தின் வரவுசெலவுக் கணக்கும், இது நடத்தப்படும் கிரமமும், பிறவும் விவரமாய் அடங்கிய அறிவிப்பை இந்தச் சபையார் முன் படித்து, பின்பு அச்சிற் பதிப்பித்து எங்கும் பிரகடனஞ் செய்யவேண்டும்.

12. இந்தப் பாடசாலையிலே சிலகாலம் கற்றுக் கொண்டுபோய் இங்கிலீசு கற்பவர்களுள்ளும், லௌகிகங்களிலே பிரவேசிப்பவர்களுள்ளும் தங்களுக்கு ஒழிவுள்ள காலத்திலே வந்து யாதாயினும் கற்க விரும்புகிறவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

13. இங்கே கற்றுத் தேர்ந்த மாணாக்கர்களை, இந்தச்சபையாருக்கு முன்னே பரீக்ஷை செய்து கற்றவல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்ற பெயரும் சின்னமும் கொடுக்க வேண்டும்.

14. இப்படிக் கல்வியறிவொழுக்கங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களும் தங்கள் வாழ்நாளைப் பிறருக்குப் பயன்படும் வண்ணம் போக்கல் வேண்டும் என்னும் கருத்துடையவர்களைச் சிதம்பர சபாநாதச் சந்நிதியிலே சங்காபிஷேகஞ்செய்வித்து, சைவப் பிரசாரகர்களாக

நியோகித்து, அவரவர் தகுதிக்கு ஏற்ற சம்பளம் நியமித்து தமிழ் நாட்டில் உள்ள ஊர்கள் தோறும் அனுப்பி அவர்களைக் கொண்டு அங்கங்கு உள்ள திருக்கோயில்களிலே சனங்களுக்குச் சமய நெறியைப் போதிப்பிக்க வேண்டும்.

## சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை பற்றிய சில தகவல்கள்

- *1864* இல் சைவப்பிரகாச வித்தியாசாலை
- நாவலரின்மறைவுக்குப் பின் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை.
- *1949* இல் நாவலர் அரசு தொடக்கநிலைப்பள்ளி
- *1953* இல் நாவலர் அரசு உயர்நிலைப்பள்ளி
- *1981* இல் ஆறுமுக நாவலர் அரசு மேல்நிலைப்பள்ளி
- *2005* இல்ஆறுமுகநாவலர் மேல்நிலை தமிழ்வழி மற்றும் ஆங்கில வழிக் கல்விப்பள்ளி.

## நிர்வாகம்

- தொடக்க காலத்தில் ஆறுமுகநாவலர் மற்றும் அவரது மாணவர் சதாசிவம்பிள்ளை அவர்களாலும், யாழ்ப்பா ணத்திலிருந்து வந்தவர்களாலும்
- *1980*களில் பள்ளிக்குழு ஒன்றால் அரச உத்தரவின்படி அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

- *2015* ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி இப்பாடசாலையின் *150* ஆவது ஆண்டு விழா மூன்றுதினங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

- *03.12.2015* இல் சிதம்பரம் பாடசாலை வளாகத்தில் நாவலரது உருவச்சிலை நிறுவப்பட்டது.

## நாவலரால் உருவாக்கப்பட்ட கோப்பாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

சிதம்பரத்திற் பாடசாலையை நிறுவிய பின் எட்டு ஆண்டுகள் கழித்துக் கோப்பாயிற் பெருந்தெரு வீதியில் ஓர் சைவப்பிரகாச வித்தியாசாலையை 1872 இல் நாவலர் ஸ்தாபித்தார். நாவலர் பெருமானது பிடியரிசித் திட்டத்திற்கு நெல்வயல் சூழ்ந்த கோப்பாய்ப் பகுதி மக்கள் உதவினர். சைவப்பாரம்பரியம் மிக்க கோப்பாயில் கிறிஸ்தவ மிஷனரியினால் பாடசாலை உருவாக்கப்பட்டு மதம் மாற்றம் நடைபெற்றது. இந்நிலையில் சேனாதிராஜ முதலியார் முதல் பல புலவர்கள் வாழ்ந்த ஊரிற் சைவத்தை நெறிப்படுத்துவதற்கு நாவலர் முன் வந்தார். இந்நிலையிலேயே நாவலர் ஓர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தோற்றுவித்தார். இப்பாடசாலை சேனாதிராஜர் வழிவந்த கந்தப்பர் என்பவருடைய காணியிலேயே இயங்கியதாக வரலாறு கூறுகிறது. இப்பாடசாலைக்கு கோப்பாய், நீர்வேலி, இருபாலை, கைதடி போன்ற ஊர்களில் இருந்து வந்து கற்றுயர்வு பெற்றனர். இப்பாடசாலைக்கருகில் 1910ஆம் ஆண்டு ஸ்ரீமான் மு.சுவாமிநாதன் என்பவர் பெண்பிள்ளைகளுக்கான ஒரு பாடசாலையைத் தோற்றுவித்தார். பின்நாவலராற்

தொடக்கப்பட்ட பாடசாலையும் சரஸ்வதி வித்தியாசாலையும் இணைக்கப்பட்டு ஒரு முகாமைத்துவத்தின் கீழ்ச்செயற்பட்டுவந்து இன்று கோப்பாய் நாவலர் வித்தியாசாலை என்ற பெயரிற் சிறந்ததோர் ஆரம்பப்பாடசாலையாகச் சகல வளங்களுடனும் இயங்கி வருகின்றது.

நாவலரின் வேண்டுதல்களால் அவரது காலத்தில் உருவான பாடசாலைகள்

- இணுவில் சைப்பிரகாச வித்தியாசாலை
- புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை *(1872)*

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசலை நாவலரின் மாணாக்கர்களாகிய நடராஜா ஐயர் அவர்களாலும், அம்பிகைபாகன் அவர்களாலும் உருவாக்கப்பட்டது. பாடசாலையைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் திரு. அம்பிகைபாகன் அவர்களின் முயற்சியால் மீண்டும் பாடசாலை உருவாக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. நாவலரின் வேண்டுதலுக்கமைய வேறுபல ஊர்களிலும் ஊர்ப்பிரமுகர்களாற் சைவப்பாடசாலைகள் கட்டும் முயற்சிகள் தொடர்ந்தன.

## நாவலரின் சிந்தையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தோற்றமும்

*1879*ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாவலர் இறைபதம் எய்தினார். நாவலர் வாழுங்காலத்தில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச ஆங்கிலப் பாடசாலை நான்காவது ஆண்டிலேயே மூடப்பட்ட கவலை அவரைப் பெரிதும் வேதனைப்படுத்தியது. ஆங்கிலமிஷனரிமாரோடு சேர்ந்து சில சுதேசிகள் பதவிகள்

பட்டங்களுக்காக நாவலரின் செயற்றிட்டங்களுக்குப் பல இடையூறுகள் செய்தனர். இதனால் பிரமுகர்களைத் தனவந்தர்களைச் சந்தித்த நாவலர்பெருமான் சைவாங்கிலக் கல்லூரி ஒன்றை விரைவில் நிறுவ முற்படுங்கள். மினஷரியினர் போல் விடுதிச்சாலையோடு கூடிய பாடசாலையாக அமைத்திடுங்கள். யான் தொடங்கிய பாடசாலையில் சைவசமய நெறிமுறைகள், குருபூசைகள், பிரசங்கங்கள் நடைபெறுவது போல் சைவாங்கிலக் கல்லூரியிலும் நடைமுறைப்படுத்துங்கள். ஆங்கில மொழிமூலங்கற்றால் உயர் உத்தியோகம் பார்க்கலாம் என்ற எண்ணம் எம்மவரிடமதிகமுண்டு என எடுத்துரைத்தார். நாவலர் பெருமான் இறையடி சேர்ந்து பதினொரு ஆண்டுகளின் பின் ஸ்ரீமான் நாகலிங்கம், ஸ்ரீமான் பசுபதிச் செட்டியார் போன்ற பெருமக்கள் நாவலர் பெருமானுக்குச் செய்யும் கைமாறாக ஆங்கிலப் பாடசாலையைத் தோற்றுவித்தனர். நாவலர் வழியிற் பிடியரிசித் திட்டத்தை உருவாக்கிப் பாடசாலையை நிர்வகித்தனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுச் சில ஆண்டுகளிலேயே விடுதிச்சாலையையும் உருவாக்கினர். நாவலர் கண்ட கனவு நனவாகியது. இந்துக் கல்லூரிகள் பலவூர்களிலும் தோன்றின. இந்துக் கல்லூரியை இந்துக்கல்லூரி அதிகார சபை என்ற அமைப்பு நல்ல முறையில் நிர்வாகம் செய்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இன்றைய நிலை நாவலரின் அன்றைய கனவே.

## நாவலர் பெருமானது வேண்டுதலும் அதனால் சுதேசிகளிடம் ஏற்பட்ட கல்விச் சிந்தனையும்

நாவலர் பெருமான் சைவ நெறியையும் பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டையும் ஆங்கில மோகத்திலிருந்து காக்கவேண்டுமென அயராது சிந்தித்தார். அதற்கான தூரநோக்குச் சிந்தனையாகச் சுதேசிகள் தம் கிராமங்கள்தோறும்

சைவப் பாடசாலைகளை நிறுவவேண்டும் எதிர்காலத்தில் தமிழரின் முன்னேற்றம் கல்வியிலேயே தான் தங்கியுள்ளது எனப் பலருக்கு எடுத்துரைத்தார். தனவந்தர்கள், சொத்துக்களுக்கு அதிபதியாக இருப்பவர்கள் சிவபுண்ணியமாகக் கருதி வித்தியா தர்மமாகிய கல்விக்கு உங்கள் பங்களிப்பைச்செய்வீர்களாயின் பெரும் புண்ணியம் உண்டாகும் எனப் பரப்புரை செய்தார். நாவலரது பிரசங்கத்திற் கடவுள் தத்துவம் மட்டுமன்றி வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளும் தொடர்ந்து எடுத்துரைக்கப்பட்டது. சேர்.பொன்னம்பலம் இராமநாதன் முதல் சில செல்வாக்கு மிக்கவர்களின் தொடர்பு நாவலருக்கு ஏற்பட்டது. நாவலர் பெருமானின் பிரிவுக்குப் பின் எமக்காக வாழ்ந்த நாவலருக்கு நாம் நன்றிக்கடன் செலுத்தவேண்டும் என்ற உணர்வு அவர் வாழ்ந்த காலத்தில் இருந்ததைவிடப் பன்மடங்காக அதிகரித்தது. நாவரால் உருவாக்கப்பட்ட பாடசாலையிற் கற்றவர்கள் தத்தம் கிராமங்களிற் சைவப்பிரசாரசாலைகள் உருவாக வேண்டும் என எண்ணினர். இதன் விளைவாகப் பல பாடசாலைகள் உருவாகின. ஆங்கிலேய அரசும் பாடசாலைகளைப் பதிவு செய்து நிர்வகிப்பவர்களைப் பரிசீலித்துச் சில உதவி நன்கொடைகளை வழங்க முன்வந்தனர். இதனால் ஊர்ப்பிரமுகர்களாக, நிலபுலன்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த சிலர் தங்கள் நிலங்களில் தங்கள் செலவிலும் அயலவர்களின் உதவியோடும் சிறிய சிறிய பாடசாலைகளை ஆரம்பிக்கத் தொடங்கினர்.

நாவலர் பெருமான் தாய்மொழிக்கல்விப் பாடசாலையையும் ஆங்கில மொழிக்கல்விப் பாடசாலை யையும் உருவாக்க வேண்டுமென விடுத்த வேண்டுகோள் வீண்போகவில்லை. நாவலரால் எழுதப்பட்ட கல்வித்திட்டமும் நாவலரால் பதிப்பிக்கப்பட்ட நூல்களும் சுதேசிகளால்

ஆரம்பிக்கப்பட்டட பாடசாலைக்குப் பெரிதும் வரப்பிரசாதமாக அமைந்தன. நாவலரது கல்வித் திட்டத்தில் சமயம், இலக்கணம், இலக்கியம், பொதுச்சூழலியல் யாவும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற அடிப்படையில் கணிதமும் போதிக்கப்பட்டது. வடமொழியும் கற்கை நெறியில் ஒரு பாடமாக அமைந்தது. இதனால் கற்றோர் மத்தியில் சீரிய அறிவும் சமயம் சார் ஒழுக்கமும் பேணப்பட்டன. இதனால் சமூக மதிப்புக் கற்றோருக்கு ஏற்பட்டது. இந்நிலையால் கல்விச்சாலைகள் அமைத்தல் என்ற ஆர்வம் அதிகரித்தது. பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டும் என்ற ஆர்வமும் மக்களிடையே மேலோங்கியது. இதன் விளைவே இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழினம் கல்வியில் மேம்பட்ட இனமாக உயர்வடைந்ததற்குக் காரணமென்றால் மிகையாகாது.

## நாவலர் வழியிற் சேர்.பொன்.இராமநாதன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைத்த மகத்தான மனிதர்களுள் இவரும் ஒருவர். இவரது ஆரம்பகால வாழ்வு, வித்தியாசமானது. பிறப்பாலேயே செல்வச்சீமான் வீட்டிற் பிறந்தவர். கொழும்பிலும் இந்தியாவிலும் கற்கும் வாய்ப்பினைப் பெற்றவர். ஆங்கிலத்தில் மிகுந்த பாண்டித்தியமுடையவர். நாவலரின் நாவன்மைபோல் இவர் ஆங்கிலத்தில் நாவன்மை மிக்கராகத் திகழ்ந்தவர். இவரது தாய்மாமனார் சேர். முத்துக்குமாரசுவாமி பிரித்தானிரயது நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்தவர். மேற்கு நாட்டுப்பாணியில் உடை அணிவதிலும் அவர்கள் பண்பாட்டிலும் ஆர்வமாக இருந்தவர். தமிழர்பண்பாட்டில் ஆண்களும் குடுமி முடிதல்

வழக்கமாக இருந்தது. இராமநாதனும் அவரது சகோதரனும் இளம் வயதில் மேலைத்தேய ஆர்வத்தினால் தமது குடுமிகளை அகற்றினர் என இவர்கள் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள இராசதானிக் கல்லூரியிற் பட்டதாரிக் கல்வியைத் தொடர்ந்த இவர் அதை இடையில் நிறுத்தி நியாயவாதிப் படிப்பை மேற்கொண்டு நியாயவாதியானவர். நாவலரது குடும்பப் பின்னணிக்கும், இராமநாதனின் குடும்பப் பின்னணிக்கும் பல வித்தியாசங்கள் இருந்ததாக அறிஞர்கள் கூறுவர். நாவலர் பரம்பரை முற்றுமுழுதான சைவ ஆசாரத்தையும், புராணப் படிப்புப் பாரம்பரியத்தையும் சுவாசிப்பாகக் கருதிய குடும்பம், இராமநாதனது குடும்பம் பிரபுத்துவக் குடும்பம். பொருளாதாரப் பலம்மிக்க குடும்பம். இருவருக்கும் இருந்த தனித்துவம் என்னவெனில் இறை நம்பிக்கை, பொதுப்பணி பற்றிய அக்கறை. நாவலரை சேர். பொன். இராமநாதன் தேடிவந்து சந்தித்தார். அதன் பயனாகவே இராமநாதனின் ஆற்றலை நாவலர் அறிந்து கொண்டார். இராமநாதனை சட்ட சபைக்குத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் நாவலர் அக்கறை எடுத்தார். 1879ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் இராமநாதனை முதன்மைப்படுத்தி நாவலர் கூட்டிய கூட்டம் இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தின் உயர் மட்டத்தினரும், கல்விமான்களுமாகச் சுமார் மூவாயிரம் பேர் அக்கூட்டத்திற் பங்குபற்றினர். நாவலர், சட்ட சபைக்குத் தகுதியானவர் சேர். பொன். இராமநாதனே எனப் பிரேரித்து அப்பிரேரணை தொடர்பாகச் சிறந்ததொரு உரையாற்றினார். இலங்கைச் சட்ட சபையில் அங்கத்துவம் வகித்த தமிழர் பிரதிநிதியாகிய சேர். முத்துக்குமார சுவாமியின் பிரிவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவரே பொருத்தமானவர் என நாவலர் விளக்கினார். இராமநாதனுக்கு வயது குறை

வென்றும் அவரைவிட வயதிலே மூத்தவரை நியமித்தால் நல்லதெனவும் சிலரிடம் கருத்து நிலவியது. இராமநாதனுடன் ஒரு கல்விமான் இப்பதவிக்குப் போட்டியிட்டார். அக்கல்விமான் வேறுயாருமல்ல. இராமநாதனது சகலன் திரு. கிறிஸ்தோபர் பிறீற்றோ அவர்களே. பிறீற்றோவுக்கும் நாவலருக்கும் நல்ல நட்பிருந்தது. எனினும் நாவலர் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்துச் செயற்பட்டார். 29 வயது மட்டும் நிரம்பிய இராமநாதனை சட்டசபைக்கு அனுப்ப வேண்டும். அவரால் எமது சமூகத்திற்கு எதிர்கால நன்மை உண்டெனன நாவலர் அன்றைய கூட்டத்தில் மிகவும் எடுத்துரைத்தார். நாவலரின் கருத்துக்குச் சமூகம் மதிப்பளித்தது. சேர். பொன்.இராமநாதன் சட்ட சபைக்குத் தெரிவானார். இலங்கைச் சட்ட சபையில் நாவலரைப் பற்றி இராமநாதன் அவர்கள் மிகச் சிறந்த உரை ஒன்றை ஆற்றியுள்ளார். 11 பெப்ரவரி 1884 ஆம் ஆண்டு ஆற்றிய உரை மிகவும் சிறப்புக்குரியது. “இந்துக்களின் தலைமைசார் சீர்திருத்தவாதி நாவலரே” என அவர் ஆற்றிய உரையை தேசாதிபதியாக விளங்கிய சேர். ஆத்தர் ஹமில்டன் கோடல் அவர்கள் நாவலரைப் பற்றி மேலும் சில வினாக்களைத் தொடுக்க அதற்கு இராமநாதன் மிகச் சிறந்த பதில்களை நாவலரின் தொண்டுகளை அடிப்படையாகக் கொண்டு பதிலுரைத்தார். நாவலர் பெருமானால் 1860ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வியாக்கியானத்தில் எதிர்காலத்தில் நிறுவனரீதியாகச் சைவ மக்கள் செயற்பட வேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றிருந்தது. சைவப்பாடசாலை களை உருவாக்குதல், நிர்வகித்தல், நல்ல ஆசிரியர்களை உருவாக்குதல், கோயில்களை ஒருங்கிணைத்து சிவாகம நெறிக்கமையப் பூஜை வழிபாடுகளை ஒழுங்கமைத்தல், இவற்றைச் சைவ நிறுவனங்கள் செயற்படுத்த வேண்டும் என நாவலர் தனது பிரசுரங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார்.

நாவலரின் சிந்தனைகளைத் தன்னுணர்விலே தாங்கிய சேர்.பொன். இராமநாதனும் அவரது பாரியாரும் யாழ்ப்பாணத்தில் கல்விப் பணியாற்ற முன்வந்தனர். சேர். பொன். இராமநாதனை ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்திய சுவாமி அருட்பரானந்தர் அவர்களின் கருத்துக்களுக்கு இராமநாதன் உயர் மதிப்புக் கொடுத்தார். அருட்பரானந்த சுவாமிகள் இராமநாதனை ஆத்மார்த்தமாகச் சிந்திக்க வைத்தார்.

நல்லூர்த் தேரடியில் ஆன்மீக ஒளிபரப்பிய செல்லப்பா சுவாமிகள் முடிச்சுக்களை அவிழ்த்து உதறு, புண்ணியங்களைச் செய் என நல்லூர் வழிபாட்டுக்கு வந்த இராமநாதனுக்கு முன்னால் நின்று உரத்து உரைத்தாராம். இராமநாதன் சித்தராகிய செல்லப்பர் சொன்னதை விளங்கிக் கொண்டார். *1909* ஆம் ஆண்டு இணுவில் மருதனார் மடம் சந்தியில் இணுவில், உடுவில் மக்களுக்குச் சுடலையாக விளங்கிய 26 ஏக்கர் காணியைக் (சுடலை உட்பட) கொள்வனவு செய்தார். அக்காணியில் பெண்களுக்கான விடுதிச்சாலையோடு கூடிய பாடசாலையை கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். அத்திவாரக் கல் வைப்பதற்கு பர்மாவிலிருந்து கவர்னர் ஒருவரை அழைத்திருந்தார். அடிக்கல் நாட்டுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு சித்தர் செல்லப்பா சுவாமிகள் பழைய பனை ஓலை விசிறியோடு அவ்விடத்திற்கு வருகை தந்து அத்திவாரக் கல்லை விசிறியால் விசிறிக் கப்பல் போலப் பெண்களுக்கு பள்ளிக்கூடங் கட்டு என்று கூறிவிட்டுப் போய்விட்டார். சேர். பொன். இராமநாதன் செல்லப்பா சுவாமிகள் அவ்விடத்திற் பயன்படுத்திய விசிறியை வாழ்நாள் முழுவதும் தன் பூஜை அறையில் வழிபாடு செய்தார் என அறியலாம். என்ன அற்புதம் ! *1913* ஆம் ஆண்டு மிகப் பெரிய பெண்கள் கல்லூரி இராமநாதனின் முயற்சியாற் திறக்கப்பட்டது.

தென்கிழக்காசியாவிலேயே மதம் பரப்ப வந்த கிறிஸ்தவர்களால் அமைக்கப்பட்ட விடுதிச் சாலையுடன் கூடிய பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி என்பது வரலாற்றாளரின் குறிப்பு. இப்பாடசாலையிற் கற்கச் சென்றவர்கள் மதம் மாறுவது வழக்கம். இந்நிலையை உணர்ந்த இராமநாத வள்ளல் நாவலர் வழியில் நின்று விடுதிச்சாலையோடு கூடிய பெண்களுக்கான மிகப் பெரிய கல்லூரியை உருவாக்கியமை ஒருவித புரட்சி என்றே கூறவேண்டும். சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் பாவாடை, தாவணி, தலையிற் பூமாலையுடன் தமிழ்மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் பெண்கள் படிக்கக்கூடிய பாரிய கல்விச் சாலையாக ஒருசில ஆண்டுகளிலேயே இராமநாதன் கல்லூரி எழுச்சி பெற்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்து பல பெண் பிள்ளைகள் இராமநாதன் கல்லூரிக்கு வந்த சேர்ந்தனர். மலேயா, ரங்கூன் போன்ற நாடுகளில் தொழிலுக்காகக் குடியேறியவர்களும் தம் பெண்பிள்ளைகளை உயர் பண்பாட்டோடு வளர்ப்பதற்காக இராமநாதன் கல்லூரியை நோக்கி வந்தனர். இராமநாதன் கல்லூரியில் நாவலரின் கருத்துக்களுக்கமைய கீழைத்தேயப் பண்பாடுகள் அப்பாடசாலையின் நேர அட்டவணையில் பாடங்கள், செயற்பாடுகளை இராமநாதனே வகுத்தார். காலை 4.30 மணிக்கு மாணவர் துயிலெழுவதிலிருந்து அவர்கள் இரவு 9.30 மணிக்கு நித்திரைக்குச் செல்லும்வரை நேர அட்டவணை தயாரித்துச் செயற்படுத்தினார். பாடக்கல்விக்குப் புறம்பாக மாலை கட்டுதல், கோலம் போடுதல், பண்ணிசை, தியானம், சமையற்கலை, விவசாயப் பயிற்சி போன்ற விசேட அம்சங்களைத் தனது நேர அட்டவணையில் இராமநாதன் வகுத்தார். இந்தியாவிலிருந்து புலமைமிக்க ஆசிரியர்களை அழைத்து அவர்களுக்கு ஊதியத்தோடு சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். இலங்கையிற் தமிழ்ப் பெண்களின்

கல்வி வளர்ச்சியில் இராமநாதன் கல்லூரியின் பங்களிப்பு உன்னத இடத்தை வகிப்பதை இன்றும் நாம் காணலாம்.

இராமநாதன் கல்லூரியின் நாளாந்த பாடசாலைகளுக்கப்பால் நடைபெற்ற கல்விச் செயற்பாடுகள்

1. தையற் பயிற்சி
2. மனையியற் பயிற்சி
3. விவசாயப் பயிற்சி
4. ஆசிரியப் பயிற்சி நிலையம்
5. கைத்தொழிற் பயிற்சி

மேற்குறித்த பயிற்சிகளிற் சிலவற்றை முறைசாராக் கல்வியாகத் திருமணமான பெண்களுக்கு கற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இராமநாதன் கல்லூரி திறக்கப்பட்டு நல்ல முறையிற் செயற்படுவது கண்டு அன்று செல்வாக்கு மிக்க பத்திரிகையாக விளங்கிய இந்து சாதனம் ஓர் அருமையான ஆசிரியர் தலையங்கம் எழுதி இராமநாமனின் கல்விப் பணியைப் பாராட்டியது. அத்தோடு இக்கல்லூரியின் செயற்றிட்டத்தில் ஆண்களுக்குமோர் பாடசாலையை ஆரம்பித்து ஏன் செயற்படக்கூடாது என வினா எழுப்பி இராமநாதனின் சிந்தனையை இந்து சாதனத்தின் கருத்துக்கு மதிப்பளித்த இராமநாதன் 1916ஆம் ஆண்டு திருநெல்வேலியில் விடுதிச்சாலையுடன் கூடிய ஆண்களுக்கான பாடசாலை ஆரம்பிப்பதற்கு அடிக்கல் நாட்டினார். 1921 ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரிக்கு நிகராகச் சகல வளங்களோடும் பரமேஸ்வராக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. சேர். பொன். இராமநாதன் 1909 ஆம் ஆண்டு கீரிமலையில் ஓர் சைவ

மாநாட்டைக் கூட்டினார். அம்மாநாட்டில் நாவலரின் கருத்துக்களை முன்வைத்து நிறுவனரீதியாக நாம் முன்னேற வேண்டும் என எடுத்துரைத்தார். இதனால் சைவவித்தியாபிவிருத்திச் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அவ்வமைப்பின் தலைவராக இராமநாதன் விளங்கினார். அச்சபையின் செயலாளராக இந்துபோட் சு. இராசரத்தினம் விளங்கினார். இவ்வமைப்பே இலங்கையில் ஆகக் கூடுதலான சைவத் தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கியதென்பது குறிப்பிடத்தக்கது. 1923 மார்கழி 09 ஆம் திகதி உருவாக்கப்பட்ட சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம் 1930ஆம் ஆண்டு ஆண்களுக்கும் பெண்களுக்குமான (ஆதரவற்ற, வறுமைக்குட்பட்ட பிள்ளைகளுக்கு) இரு இல்லங்களை நிறுவி சாதி, குல, சமூக நிலை என்பவற்றுக்கப்பால் அனைவருக்கும் கல்வி வழங்க அரும்பாடு பட்டது.

சேர். பொன். இராமநாதனின் கல்வித் தொண்டுக்கும் சமூகப் பணிக்கும் நாவலரே மூல காரணமாக விளங்கினார் என்பதை இராமநாதனின் வரலாற்றைக் கற்பவர்கள் உணர்வர்.

## சைவத்தமிழர்களின் அறிவை வளர்ப்பதற்கான உருவாக்கிய அச்சியந்திர சாலை

நாவலர் பெருமான் சைவத் தமிழர்களின் வாழ்வுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். அவரது எழுச்சி கண்டு கிறிஸ்தவ மிஷனரியினர் பல இடையூறுகளை விளைவித்தனர். மிஷனரியின் பத்திரிகையாக விளங்கிய ‘உதய தாரகை’ நாவலரை விமர்சித்து அவரது பணிகளுக்கு இடையூறு விளைவித்தது. ஏட்டில் உள்ள சைவ சமய

நூல்களை அச்சேற்றிப் பாதுகாத்த போது மிஷனரியின் செயற்பாடுகளுக்குப் பதிலளிப்பதற்கு ஆச்சியந்திரம் அவசியம் என்பதை நாவலர் உணர்ந்தார். 1849ஆம் ஆண்டு நாவலர் இந்தியாவில் காலால் இயக்கும் அச்சியந்திரத்தைக் கொள்வனவு செய்து பாய்க் கப்பலிற் கொண்டு வந்து சேர்த்தார். வண்ணார்பண்ணையில் 'வித்தியானுபாலன யந்திரசாலை' என்ற பெயரில் அச்சகத்தை நிறுவி சமய நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினார். 1850 ஆம் ஆண்டு முதலாம், இரண்டாம் மூன்றாம் பால பாடங்களை இயற்றி, அச்சேற்றி வெளியிட்டார். 1851 ஆம் ஆண்டு கோயில்களிற் பலியிடல் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்துப் பல பிரசுரங்களை வெளியிட்டார். நாவலரின் இப்பிரசுரம் மிகவும் பிரபல்யம் பெற்றது. 1851இல் நன்னூல் விருத்தியுரையை வெளியிட்டார். கற்றோர் மத்தியில் மிகுந்த மதிப்பை இந்நூல் வெளியீடு தோற்றுவித்தது. 1852ஆம் ஆண்டு மிகப் பெரிய கைங்கரியத்தை அச்சு வாகனமேற்றினார். செய்யுளின் மட்டுமிருந்த பெரிய புராணத்தை மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் வசன நடையில் வெளியிட்டார். நாவலரின் பெரிய புராண வசன நடை, இந்திய அறிஞர்களை வியப்பிலாழ்த்தியது. 'உரைநடையின் தந்தை' எனவும் 'வசன நடை கைவந்த வல்லாளர்' எனவும் நாவலரை அறிவுலகம் உச்சரிக்க வைத்தது. நாவலர் வாழ்ந்த காலத்தில் மின்சார வசதிகள் இல்லை. நாவலர் ஊனுறக்கமின்றி இலுப்பெண்ணை விளக்கில் ஏடுகளில் இருந்த விடயங்களை கடதாசிகளில் எழுதித் தானே அச்சேற்றி வெளியிட்டார். தினமும் இயந்திரத்தைக் காலால் தானே இயக்கினார் என அவரது நெருங்கிய உறவு வழியினர் இன்றுமுரைக்கின்றனர். 56 வயதில் நாவலர் நோய்வாய்ப்பட்டு இறந்தற்கு அவரது நித்திரை இன்றி ஓய்வொழிச்சல் இல்லாது அச்சுப்பதிவு

செய்தமையும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. இப்புண்ணியவானின் வாழ்வை நாம் நினைத்துப் பார்க்க முடியாது. 1856இல் வால்டன் பாதிரியின் கடிதங்களுக்கு நாவலர் பதிலாக எழுதிய பிரசுரங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சேற்றப்பட்டது. மிஷனரியினரை அதிர வைத்தது. 1858ஆம் ஆண்டு ஆனி மாதம் சென்னை தங்கசாலைத் தெருவில் 300 ஆம் இலக்கக் கட்டடத்தில் வித்தியானுபாலன அச்சியந்திர சாலையை நிறுவினார். இந்தியாவில் வாசம் செய்து காலத்திற் பல நூல்களைப் பரிசீலித்துப் பதிப்பித்து வெளியிட்டார். 1872 இல் ஐப்பசி, யாழ்ப்பாணத்திற் வெளியிட்ட 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்னும் விடயங்கள் நிறைந்த நாவலரின் முக்கிய பிரசுரம் ஓர் வரலாற்று ஆவணமாக இன்றுங் கருதப்படுகிறது. ஈழத்து இந்து சமய வரலாற்றை ஆராய்பவர்கள் நாவலருக்கு முன், நாவலருக்குப்பின் எனக் காலத்தை வரையறை செய்யும் அளவிற்கு நாவலரின் இக்கட்டுரை வெளியீடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. எழுபத்தைந்து நூல்களைத் தனது அச்சியந்திரசாலைகள் மூலம் பதிப்பித்து வெளியட்ட நாவலர், பல பிரசுரங்களையும் தன் வாழ்வில் வெளியிட்டவர். நாவலரது உரைநடைப்பணி, பதிப்பித்தற் பணி தமிழ் நாட்டிற் பலரை இப்பணியில் ஈடுபடச் செய்தது. உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை முதல் பல சான்றோர்கள் நாவலர் வழியில் நூலாராய்ச்சிப் பணிகளைத் தொடர வாய்ப்பேற்படுத்தியது. கிறிஸ்தவ மிஷனரியின் அச்சியந்திர ஆதிக்கத்திற்கு சாவு மணி அடிக்கச் செய்தமை நாவலரின் அச்சக முயற்சியே. நாவலர் வழியில் யாழ்ப்பாணத்திற் சிலர் அச்சியத்திர சாலைகளை நிறுவத் தொடங்கினர். நாவலர் காலத்தில் வாழ்ந்த வடமராட்சி வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ச. வைத்திலிங்கம்பிள்ளை 'பாரதி நிலைய முத்திராட்சக சாலை அச்சகம்' என்ற

அச்சகத்தை நிறுவிச் சில நூல்களை வெளியிட்டார். இவர் எழுதிய 'சாதி நிர்ணய புராணம்' என்னும் நூல் இவரது அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாவலரது அச்சகம் நாவலருக்கும் பின் பல நூல்களை வெளியிட்டுப் பெருமை பெற்றது. நாவலரின் அச்சகம் இருந்த கட்டடத்தை விலை கொடுத்து வாங்கித் தமிழ்த் தொண்டு செய்தார் ஸ்ரீமான் முத்துத்தம்பிப்பிள்ளை. இப் பெரியவரே 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற வரலாற்று நூலை எழுதி வெளியிட்டவர் ஆவார். நாவலரது நெறியில் எழுந்த சைவபரிபாலன சபை, சைவப்பிரகாச அச்சியந்திர சாலையை நிறுவிச் சைவத் தமிழ்ப் பத்திரிகையையும், நாவலரது நூல்களின் மறு பதிப்புக்களையும் தொடர்ந்து செய்து வந்தது.

## நாவலரது சீர்திருத்தக் கருத்துக்களால் ஏற்பட்ட மாற்றங்கள்

சிவபூமியாகிய ஈழநாட்டில் 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் காலடி எடுத்து வைத்த நாள்முதல் பழம்பெரும் திருக்கோயில்கள் அனைத்தும் அழிந்தொழியத் தொடங்கின. ஒல்லாந்தர்கள் மதமாற்றக் காரியங்களில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டனர். ஆங்கிலேயர்கள் கெட்டித்தனமாகத் தமது பண்பாட்டை எம் மண்ணில் விதைத்தனர். படிப்பறிவு குறைந்த பலர் சைவ நெறி முறைகளின் உண்மை விளங்காது தத்தம் போக்கிற் வழிபாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். ஒல்லாந்தராட்சியின் பிற்பகுதியில் வழங்கப்பட்ட சில அனுமதிகளின் அடிப்படையில் சில கோயில்கள் கட்டுமானம் பெறத் தொடங்கின. நாவலர்

காலத்தில் ஆகமஞ் சார்ந்த கோயில்களை விட, ஆகமஞ்சாராத கோயில்களும் வழிபாடுகளும் அதிகம் காணப்பட்டன. சைவ ஆலயங்கள் சிலவற்றில் மிருக பலியிடல் வழக்கமிருந்தது. அந்நியராட்சிக் காலத்திற் கோயில்களழிக்கப்பட்டபோது, அழிக்கப்பட்ட கற்கள், இதர பொருட்களை எமது முன்னோர் வழிபாட்டுச் சின்னங்களாகப் பயன்படுத்தினர். கிணற்றடிகளிலும் குளத்தடிகளிலும் ஊர் எல்லைகளிலும் மரத்தடிகளிலும் வழிபாடுகள் நடைபெற்றன. காவற் தெய்வங்களுக்குப் பலியீடு செய்து சில ஊர்களில் வழிபாடு நடைபெற்றது. சில கோயில்களில் முக்கிய விழாக்களின் போது மிருகங்களைப் பலியிட்டு ஆரம்பித்தனர். அறியாமை காரணமாக உண்மைச் சமயத்திற்கு மாறாக இவ்வழிபாட்டுமுறை பின்பற்றப்படுவதை நாவலர் கண்டித்தார். இதனால் பல தலங்களில் மிருகபலி நிறுத்தப்பட்டுச் சிவாகமங்களே பின்பற்றப்பட்டன. இன்று ஈழத்திற் சைவத்திருக் கோயில்களிற் சரியான முறையிற் பூஜைகள் நிகழ வித்திட்டவர் நாவலர் பெருமானே. கோயில்களிற் சேவலின் செவியை அல்லது கடாய் ஆட்டின் செவியை அறுத்துத் தேர்த்திருவிழா போன்ற முக்கிய தினங்களை ஆரம்பிக்கும் வழக்கம் இருந்தது. நாவலர் இதைக்கடுமையாகக் கண்டித்தார். இதனால் பல கோயில்கள் நாவலரின் கருத்துக்களை மாற்றம் பெற்றன. இன்று 98 சதவீதம் சைவக் கோயில்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு மூல காரணமாய் விளங்கியவர் நாவலர்.

## திருக்கோயில்களிற் பஞ்சபுராணம் பாடும் மரபு

ஈழத்துத் திருக்கோயில்களிற் பஞ்சபுராணப் பாடும் மரபை உருவாக்கியவர் நாவலர் பெருமானே. கோயில்களில் வாண விளையாட்டு, பெண்களின் கூத்து நடனங்கள், வேறு

களியாட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை நாவலர் எடுத்துரைத்தார். திருக்கோயில்களில் ஓதத்தகுந்தவை. ஓதத்தகாதவை எவையென எடுத்துரைத்தார். புராண படன மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஆலயக் கட்டுமானங்கள் யாவும் சிவாகம நெறிமுறைக்கு அமையவே இருக்கவேண்டுமென வேண்டுதல் விடுத்தார். இதனால் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி இன்றுவரை எழுச்சியுடன் காணப்படுவதை நாமுணரலாம். கோயில்கள் தோறும் புராணப்படிப்பு, சமயப்பிரசங்கம், சிவபுண்ணிய காரியங்கள் தவிர வேறு வேடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட வேண்டுமென நாவலர் பெருமான் வேண்டுதல் விடுத்தார். அவ்வேண்டுதல் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றுவரை பின்பற்றப்படுவதை உணரலாம். பாடசாலைகளிலும் வெள்ளிக்கிழமைகளிற் சிவபுராணம் பாடும் மரபைத் தோற்றுவித்தவர் நாவலர் பெருமானே.

## சிவாலய தரிசனமும் ஆசாரமும்

நாவலர் பெருமான் சைவ மக்கள் ஆசாரமாக வாழ வேண்டும் என்பதற்குப் பல அறிவுரைகளைக் கூறினார். சிவாலய தரிசன விதி என்ற நூலை உருவாக்கித் திருக்கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும். அங்கு எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும். கோயிலில் செய்யக்கூடாதவை எவை என்பதை நன்றாக விளக்கினார். சைவ வினாவிடை முதலாம், இரண்டாம், மூன்றாம் பால பாடம் அனைத்திலும் இறை மகத்துவத்தையும் இறை வழிபாட்டின் மேன்மையையும் விளக்கினார். சைவ சமயத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நித்திய வழிபாட்டு நெறிமுறையைச் சிறப்பாக எடுத்துரைத்தார். அனுட்டான விதி முதற் புத்தகம், அனுட்டான விதி இரண்டாம்

புத்தகம் என இரு நூல்களை வெளியிட்டுச் சைவ சமயத்தவர்கள் சிவதீட்சை பெற்று நித்திய வழிபாட்டினை எவ்வாறு சரியான முறையிற் பேண வேண்டும் என்பதை மிக அழகாக எடுத்துரைத்தார். இவை மட்டுமன்றி சிவபூஜா விதி, சிரார்த்த விதி, போசன விதி, தர்ப்பண விதி போன்ற நூல்களையும் எழுதிச் சைவ சமயத்தவர்கள் தூய வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டினார். ஈழத்தில் சைவ சமயத்தவர்களைச் சீரான ஒரு நெறிமுறையின் கீழ்க் கொண்டு வந்த பெருமை நாவலர் பெருமானையே சாரும்.

## நாவலர் பெருமானின் மனித நேயம்

நாவலர் பெருமான் எவ்வித சுய நோக்கமுமின்றி இறுதி மூச்சுவரை பொது நோக்கோடு வாழ்ந்தவர். ஒவ்வொரு நிமிடத்தையும் தன்னுயிர் பிரியும் வரை சமூகத்திற்காக அர்ப்பணித்தவர். ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இலவசக் கல்வியை அறிமுகஞ் செய்தவர் நாவலர் பெருமானே என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இவர் உயர்ந்த மனிதநேயம் மிக்கவர். அதற்குச் சான்றாக அவரது வாழ்வில் அவர் செய்த சில மனித நேய சம்பவங்கள் பதிவாகியுள்ளன. நாவலரது மாணவர் ஆறுமுகம் செட்டியார் நாவலர் இந்தியாவிற்குச் சென்ற வேளை நாவலரது பாடசாலைப் பொறுப்பை ஏற்று நடாத்தி வந்தார். வித்தியாசாலையின் அதிகாரங்கள், நிதிவளங்களையும் இவரிடம் ஒப்படைத்து விட்டு நாவலர் சென்றார். இந்தியாவில் முக்கிய பணிகள் நிறைவேற்ற வேண்டி இருந்தமையாற் சில ஆண்டுகள் தொடர்ந்து அங்கு தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆறுமுகம் செட்டியார் பரம்பரை வாணிபர், அவரது வர்த்தக நடவடிக்கை நட்டம் போனபோது நாவலர் தேடி வைத்த பாடசாலை வளத்தையும்

வர்த்தகப் பிரச்சினைக்குப் பயன்படுத்திவிட்டார். நாவலர் நாடு திரும்பிய வேளை மிகவும் நட்டமடைந்து மறைந்து வாழ்ந்து கொண்டிருந்த ஆறுமுகம் செட்டியாரால் நாவலருக்குரிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாமற் போனது. ஆறுமுகம் செட்டியாரை நீதிமன்றின் உதவியுடன் பிடிவிறாந்து ஏற்பாடு செய்து அவர் தரவேண்டிய பணத்தை அறவிடலாமென நாவலருக்குச் சிலர் வழி கூறினர். நாவலர் மறுத்தார். ஆறுமுகம் செட்டியார் முன்பு நல்ல கைங்கரியங்களைச் செய்தவர். சைவப்பிரகாச வித்தியாசாலைக் கருகில் 1 ½ பரப்பு நிலத்தைத் தமது உறவினர்களூடாக தரும சாசனம் செய்வித்தவர். 197 ½ ரூபா பெறுமதியான நிலத்தை அன்று வழங்கியுதவிய ஆறுமுகம் செட்டியாரைப் பிடித்துக் கொடுக்க மாட்டேன் என மறுத்தவர்.

நாவலரை மிகவும் வேதனைப்படுத்தக்கூடிய வகையில் உதயதாரகைப் பத்திரிகையில் விமர்சித்து எழுதியவர் கரோல் விஸ்வநாதபிள்ளை அவர்கள். பிறப்பாற் சைவசமயத்தைச் சார்ந்த விஸ்வநாதபிள்ளை அவர்கள் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உயர்கல்வி கற்பதற்காக மிஷனரியில் இணைந்து ஞானஸ்தானம் பெற்றவர். யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இவரும் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் B.A. பட்டதாரிகள் ஆனார்கள். கரோல் விஸ்வநாதபிள்ளையை மிஷனரியினர் பயன்படுத்தி நாவலரது சமயச் செய்திகளைத் தொடர்ந்து கேலி செய்வித்தனர். கரோல் விஸ்வநாதபிள்ளை மிஷனரியுடன் எதிர்பாராத விதமாகப் பகைக்க நேர்ந்தது. மிஷனரியினரை விட்டு வெளியேறினார். நாவலரை நாடி வந்தார். தங்க ஊசி ஒன்றை குத்துவிளக்கிற் சூடுகாட்டி நாவலருக்கு முன்னால் தன் நாக்கிற்குத்தானே சூடு வைத்தார். இது

நாள்வரை உங்களை வசை பாடிய நாவுக்குத் தண்டனை கொடுக்கிறேன். நான் செய்த தவறினை மன்னித்துக் கொள்ளுங்கள் என வேண்டினார். நாவலர் தன்னைத் தூற்றிய கரோல் விஸ்வநாதபிள்ளையை அரவணைத்து மன்னிப்புக் கொடுத்தார். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெளியிட்ட கரோல் விஸ்வநாதபிள்ளை பற்றிய நூலில் இச்சம்பவத்தை உள்ளபடி பதிவு செய்துள்ளார்கள்.

1877 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் என்றுமில்லாதவாறு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. ஒருவேளை உணவுக்கே மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். அவ்வேளையில் நெல் வேளாண்மை செய்பவர்களிடம் கால் நடையாகச் சென்று நெல்லைப் பெற்று வண்ணார் பண்ணையிற் கஞ்சித் தொட்டி ஒன்றினை அமைத்துப் பசியால் வருந்தியவர்களுக்குக் கஞ்சித் தொட்டித் தர்மம் செய்தவர் நாவலர். பிறரையும் கஞ்சித் தொட்டித் தர்மம் செய்யுமாறு ஊக்குவித்தார். பேதி நோயினாற் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த உணவுகள், மருத்துவ வசதிகளைச் செய்யுமாறு அன்றைய பிரித்தானிய அரசு உத்தரவு உதாசீனம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அரச நிர்வாக அதிகாரியாக விளங்கிய துவைனம்துரை சரியான முறையில் இவற்றை மேற்பார்வை செய்யவில்லை எனச் செய்திகள் வெளியாகின. நாவலருக்குப் பொதுமக்கள் இக்குறைபாடு தொடர்பாக முறையிட்டனர். யாழ்ப்பாணக் கரையூரில் பேதி நோயாற் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளுக்குச் சென்று துவைனம் துரை அவர்களோடு முரண்பட்டார் என்ற செய்தி நாவலருக்குக் கிட்டியது. (குறிப்பாகப் பேதி நோய் வந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்கள் இறந்தபின் அடக்கம் செய்வது கூடச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலம்). மக்களை அரச நிர்வாகிகள் வேதனைப்படுத்திய செய்தி நாவலரது மனதை மிகவம் பாதித்தது. இதனைக்

கண்டித்து நாவலர் பெருமான் தமது பாடசாலையில் ஒரு விசேட கூட்டத்தை நடாத்தினர். அக்கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை *1878* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தேசாதிபதி சேர் லோங்டன் யாழ்ப்பாணம் வந்த போது அவரைச் சந்தித்து ஒரு குழுவாகச் சென்று தமது விண்ணப்பத்தை ஒப்படைத்தார். நாவலரின் இம்முயற்சியோடு திருவனந்தபுரத்தில் நீதிபதியாய் இருந்த தா.செல்லப்பாபிள்ளை, அப்புக்காத்து நாகலிங்கம் மேலிடத்திற்குக் கடிதங்கள் எழுதினார். இவ்வாக்குவாதம் தொடர்ந்தது. இதனால் மக்கள் நன்மை பெற்றனர். நாவலரோடு முரண்பட்ட துரைவனம்துரை நாவலரது இரக்க சிந்தனையும் சேவையையும் உணர்ந்து மதிப்பளித்தார். நாவலர் இறைபதம் அடைந்தபோது அரச கச்சேரி அலுவலகத்தை மூடி அந்நாளை விடுமுறை நாளாக அறிவித்தார்.

நாவலரிடம் கற்ற மாணவர்களில் ஒருவர் பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டுக் குற்றுயிராக அவரது வீட்டுப் பின்புறத்திற் பெற்றோரால் ஒதுக்கப்பட்டிருந்தார். பெரியம்மை நோய்க்கு அக்காலத்தில் மருந்து கண்டு பிடிக்கப்பட் டிருக்கவில்லை. அந்நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் வீட்டின் கொல்லைப்புறத்திற் தனிமைப்படுத்தித் தூரத்தில் நின்று உணவைக் கொடுத்துத் தனிமையிலேயே இறக்கவிட்டு விடுவார்கள். பெரியம்மை நோய் வந்தவர் வீட்டு வாசலில் வேப்பங்குழைகளைக் கட்டி நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் வீட்டு வளவில் இருப்பதை வெளிப்படுத்துவார்கள். இந்நோய் வந்தவர் பாவப்பட்ட கர்ம வினையாளராகச் சமூகம் கருதும் வழக்கம் இருந்தது. நாவலர் தன் மாணாக்கர் இந்நோயிற் துடிப்பதை அறிந்து எவருக்கும் தெரியாமலே தனிமைப்படுத்தப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்த மாணவனுக்குச் சமீபமாகச் சென்று அவனுக்காகப் பிரார்த்தனை செய்து அவனுயிர் பிரியுங் காலத்தில் ஆறுதல் செய்தார் என்பதை

அறியும்போது மெய் சிலிர்க்கிறது. நாவலரின் மனித நேய மாண்புக்கு இச்சம்பவம் ஓர் முக்கிய உதாரணம் எனலாம்.

நாவலர் தன் குடும்பத்தவர்களையும் மனித நேயப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் ஈடுபடுமாறு வலியுறுத்தியுள்ளார். நாவலரது சகோதரனின் புத்திரி ஒருவர் இளம்வயதிற் காலமானார். அவ்வேளையில் நாவலர் சென்னையில் இருந்தார். தகவல் அன்றைய சூழலுக்கேற்பப் பல நாட்களுக்குப் பின்பு கிடைத்தது. தனது சகோதரனுக்கு உருக்கமான ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் தங்களுக்குப் போல எனக்கும் துக்கம் ! துக்கம் ஆயினும் என்ன செய்யலாம்? ஒருவர் முன்னும் ஒருவர் பின்னுமாக நாமெல்லாம் மரணிக்கவே போகிறோம்.

*''நடலை வாழ்வு கொண்டென் செல்தீர் காணிலீர்*
*சுடலை சேர்வது சொற்பிரமாணமே*
*கடலினஞ்சமுதுண்டவர் கைவிட்டார்*
*உடலினார் கிடந்தூர் முனி பண்டமே''*

எனக் குறிப்பிட்டு அப்பிள்ளைகளின் பெயரால் வீட்டுக்கருகில் உள்ள கைலாசபிள்ளையார் கோயிற் திருப்பணியை இப்புத்திரியின் பெயராற் செலவு செய்து கும்பாபிஷேகத்தை முடிப்பீர்களாயின் பெரும்புண்ணியம் ! பெரும் புண்ணியம் ! நாளை நாளை என்பது தகாது ! நிறைவேற்றுவீர்களென்றே நம்புகிறேன். பிறருக்கு உபதேசித்தது மட்டுமல்ல தன் குடும்பத்தைக் கொண்டும் நல்ல தொண்டுகளை நிறைவேற்றியவர் நாவலர் பெருமான்.

## நாவலரின் இறுதி நிமிடங்கள்

நாவலர் பெருமான் கடிகாரம் ஓடுமுன் ஓடி கணப்பொழுதும் நற்காரியங்களை நிறைவேற்றியவர். நீதி நெறியில் நின்று நேர்மையாகப் பணி செய்தவர். ஒவ்வொரு நிமிடத்தையும் பெறுமதியாகச் செலவு செய்தவர். சைவமும் தமிழும் நின்று நிலைபெற வேண்டுமென்ற குறிக்கோளோடு இமைப்பொழுதும் செயற்பட்டவர். சேர்.பொன். இராமநாதனை சட்ட மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சிபார்சு செய்தவர். ஆனால் தனக்கு ஒரு பதவியையோ படோபகார வாழ்வையோ தேடாதவர். கால் நடையாகவும், பாய்க்கப்பலிற் பயணம் செய்தும் இரவு பகல் ஓய்வின்றிப் பாடுபட்டவர். அவர் வாழுங் காலத்தில் எம் சமூகத்திற்கு அவர் பெருமை விளங்கவில்லை. அன்று மின்சார வசதியில்லை, சீரான போக்குவரத்து வசதியில்லை, ஏடு, எழுத்தாணி, மைதொட்டு எழுதும் பேனாக்குச்சி, கடதாசி, கால்களால் இயக்கும் அச்சியந்திரம், இலுப்பெண்ணை விளக்கு, மிஷனரியின் கெடுபிடி, இவற்றுக்குள்ளும் இம் மனிதன் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி, அச்சிட்டு, வெளியிட்டவர் என்றால் வியப்பாகவே இருக்கின்றது. அவர் உயிர் வியப்பாகவே இருக்கின்றது. அவர் உயிர் பிரிகின்ற போதும் அவர் கையால் எழுதிப் பதிப்பிக்காத புத்தகங்கள் ஆறு ஆயத்தமாக இருந்துள்ளன. நித்திரையிலும், அவர் நிம்மதியாக இருந்திருக்க் மாட்டார். அவர் ஸ்தாபித்த பாடசாலை, ஆசிரிய வேதனம், அச்சுக்கூடப் பணி, தன்னை நோக்கி வியாக்கியானம், செய்பவர்களுக்குப் பதில், சில நீதிமன்ற வழக்குகள் இப்பெருமகனைச் சூழ்ந்திருந்தன. ஆறுமுகநாவலர் அகத்தாலழுத நாட்கள் நிறையவே உண்டு. புற சமயத்தவர்களால் அகம் நொந்ததை விட எம்மவர்களாலேயே அகம் நொந்து வெதும்பிய நாட்களும் உண்டு. தன்

சுயசரித்திரத்தை அவர் எழுதவில்லை. ஆனால் அவரது அகவேதனையை வெளியிட்டிருக்கின்றார். என்னைப் போல் ஒருவர் எதிர்காலத்தில் எம் சமயத்திற்குக் கிடைப்பாரா என்று கவலைப்பட்டுள்ளார். தன் ஆயுள் முடிவதற்கிடையில் தன் சிந்தனையில் எழுந்த விடயங்கள் நிறைவேறுமா என எண்ணிக் கவலைப்பட்டுள்ளார். 1870ஆம் ஆண்டு நாவலர் தன்னகத்தில் சுமந்த சில விடயங்களை சுருக்கமாக எழுதி வெளியிட்டார். அவற்றில் ஒரு பகுதியை இந்நூலைப் படிப்பவர்கள் வாசித்துணர்வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

*வீடுவிளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது. என்சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே யாம்.*

*இப்பேராசையினால் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல, அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில. சைவ சமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடைய வர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின். நான் எடுத்த முயற்சிக ளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறி விடும் நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள் ' செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.*

*தன்னிம்மைப்பயன்களெல்லாம் இகழ்ந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபதுவருஷகாலம் சுவசமயவிருத்தியின்*

பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெறாது? நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கங்கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமய விருத்திப் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செயப்பட்டன. தற்காலத்திலே சைவசமயவிருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவில்லை, என்னை அவமதிக்கவுமில்லை. இஃதென்னையாச்சரியம்!!! சைவசமயவிருத்திப் பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங் காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே

நன்கு மதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பா வண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ் செல்வம். இ:: திங்ஙனமாக.

நிலையில்லாத என்சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க்கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமே யாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவசாத்திரங்களையுங் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர் களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர் களாகவும் நியோகிக்கலாம்.

"நான் ஜய (வருடம்) (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் வித்தியாசாலையிலே இங்கிலீஷ் கற்றேன் பிலவ (ஞூ) (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை, என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்

*களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக (?) புரட்டாதி மீ (1843) பரித்தியாகஞ்செய்தேன். பார்சிவல்துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன், தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலி' கற்றவர்களுள் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அ∴ தில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது..."*

இப்படிக் கவலைப்பட்ட நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாவலர் பெருமானுக்கு இறை அழைப்புக் காத்திருந்தது. ஆடி மாதம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூஜைக்குப் பின் எந்தவொரு பிரசங்களும் அவர் செய்யவில்லை. சில எழுத்து வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவரது உள்ளுணர்வு சொன்னது. நாவலரின் தமையனாரின் மகன் த. கைலாசபிள்ளையை தனக்கருகே இருத்தி சில விடயங்களை எழுதுவித்தார். கடைசிக் காலம் அவருடைய உள்ளத்திற்

கவலை நிறைந்திருந்தது. கார்த்திகை மாதம் சிவபதமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன் தான் வசித்த வண்ணார் பண்ணை வீட்டில் நடு அறையில் சுற்றிச் சுற்றி திருவாசகம் பாடிக் கொண்டிருந்தார். சில விடயங்கள் எழுத வேண்டும் நாளை உதயத்தில் வா எனத் தன் பெறா மகன் கைலாசபிள்ளையை முதல் நாள் வருமாறு சொன்னவர். அவர் வந்து காத்திருந்த வேளை கைலாசபிள்ளையைக் கவனியாது திருவாசகத்தை ஓதிய வண்ணம் பரவசமாயிருந்தார். அவசரமாக எழுத வேண்டும் என்று அழைத்தவர் எழுதவில்லை. இவருக்குத் தன் மரணம் பற்றிய நிலை தெரிந்து விட்டது போலும். இரண்டு நாட்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்துள்ளார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர். புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய் விட்டது. வேதாரணியத்துச் சைவச்சிவாச்சாரியாரை அழைத்து இவர் நித்திய பூஜை செய்யும் சிவலிங்கத்திற்குப் பூஜை நடைபெற்றது. பூக்களைக் கையிலேடுத்து ஒவ்வொன்றாகச் சிரசிற் போட்டு தன்பாட்டிற் கும்பிட்ட வண்ணமிருந்தார். தன்னைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் இறக்கப் போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார். தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தைப் பருகினார். சயனிக்கும் இடத்திற் தலையிற் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ் செய்தார். கார்த்திகை மாதம் 21ஆம் நாள் மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த

மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர். வித்தியாசாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். "கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்" இதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவே இல்லை. என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

## தேரில் நாவலர் இறுதியாகப் புறப்பட்டார்

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16 நாள் இப்பூவுல வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலர் பெருமானைச் சனிக்கிழமை அவரது கைலாசபிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடாத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்குக் கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதினத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப்படும் நமச்சிவாயத் தேசிகரால் நிர்வாண அந்தியேட்டி செய்யப்பட்டு, அவரது வீட்டிலும் வண்ணார் பண்ணைக் கோம் - பயன் மணற் சுடலையிலும் தேசிகராற் கிரியைகள் நிறைவேற்றப்பட்டது. நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக்களினால் ஒரு பூந்தேருக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத் துயர் தாங்க முடியாது. அங்கப் பிரதட்சணமாக சுமார் 3 ½ மைல் தூரச் சென்று சுடலையை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்க முடியாத உருக்கமான ஒரு நிகழ்வு. கோம்பயன் மயானத்தில் இராத்திரிவேளை சந்தனக் கட்டைகளடுக்கி ஆயிரக் கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகியது.

‘நானுயி ரோடிருக்குப் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வருடகாலம் சைவ சமய உண்மைகளைப் போதித்து வந்தேன்’ இவை நாவலரின் கடைப் பிரசங்க வாசகங்கள், நாவலரைப் போல் நமக்கு யாருண்டு. நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவலர் பெருமானுக்குப் பல நினைவுச் சின்னங்கள் இன்றுவரை நிறுவப்பட்டு வருகிறது. அவர் வாழுங் காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைந்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள் ஏராளம். ஈழநாட்டில் சைவமும் தமிழும் இன்று நிலைபெற்று உள்ளதென்றால் அதற்கு இப்புண்ணியவானே முக்கிய காரணம் என்பதை அனைவரும் உணரவேண்டும். அப்பெருமகனின் சரித்திரத்தை, சிறப்புக்களை, சாதனைகளை அனைவரும் முழுமையாகப் படிக்க வேண்டும். சைவப் பாடசாலைகள், சைவ நிறுவனங்கள் அனைத்திலும் நாவலர் நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர் பெருமானை எம் சந்ததி மீள நினைப்பதற்கு நாம் வழி செய்ய வேண்டும்.

# நாவலர் தொடர்பான நினைவுப் பதிவுகள்

## நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





# நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் பெருமான் அவர்களால்
## அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் பெருமான் அவர்களால் அனுதினமும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்





## நாவலர் சகோதர வழிக்குடும்பத்தில் இன்னும் பாதுகாக்கப்பட்டு வரும் நாவலர் பயன்படுத்திய நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும்.





நாவலர் வழிக்குடும்பத்தாரால் நாவலர்
நினைவாகப் பாதுகாக்கப்பட்டு வரும் படம்



## நாவலராற் கட்டுவிக்கப்பட்ட
## வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை





# நாவலர் பெயரில் நாவலர் பரம்பரையாக நடாத்தப்பட்டு வரும் முன்பள்ளி





## புற்றளை சித்தி விநாயகராலயம்



## கைலாசப் பிள்ளையார் கோயில்



# சைவப்பிரகாச அச்சியந்திரசாலை





## நாவலர் கலாசார மண்டபம்





# யாழ் இந்துக் கல்லூரியும் நாவலர் நினைவுகளும்






# யாழ் இந்துக் கல்லூரியும் நாவலர் நினைவுகளும்





## யா/வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
## நாவலர் மகா வித்தியாலயமாக இன்று







யா/வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
நாவலர் மகா வித்தியாலயமாக இன்று

யாழ். இந்துக் கல்லூரி





யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின்
இன்றைய தோற்றம் - இங்கு தான் நாவலர் பெருமான்
முதற் பிரசங்கியானார்.



## யாழ் மத்திய கல்லூரி




## யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை



## நாவலர் பாடசாலையின் பதிவுகள்





## நாவலர் பாடசாலையின் பதிவுகள்






நாவலர் மணிமண்டபம்
இந்துசமய கலாசார திணைக்களத்தாற்
பராமரிக்கப்பட்டு வருகின்றது.





நாவலர் மணிமண்டபம்
இந்துசமய கலாசார திணைக்களத்தாற்
பராமரிக்கப்பட்டு வருகின்றது.



நாவலர் பாடசாலையில் நாவலர் கட்டுவித்த கோயில்



நாவலர் வாழ்ந்த வீட்டின் எச்சம்



# நாவலர் பரம்பரையில்







# நாவலர் பரம்பரை வரைபு



நாவலரால் இந்தியாவிற் கட்டுவிக்கப்பட்ட
சைவப்பிரகாச வித்தியாசாலையின் இன்றைய பதிவுகள்



## நாவலரால் இந்தியாவிற் கட்டுவிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் இன்றைய பதிவுகள்

# ஆறுமுக நாவலர் - 1864 ல் நிறுவிய பள்ளியின் நடுமன்றம்



கிழக்கு முகம்



## நாவலரால் இந்தியாவிற் கட்டுவிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் இன்றைய பதிவுகள்

### விளையாட்டுத் திடல்



நுழைவு வாயில்



தளவாட அறைகள்



கிரிக்கெட் ஆடுகளம்



கைபந்து மைதானம்



புதிய கூடைபந்து ஆடுகளம்

## நாவலரால் இந்தியாவிற் கட்டுவிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் இன்றைய பதிவுகள்

ஞானப்பிரகாசர் வடக்குத் தெருவில்
ஆறுமுக நாவலரால் 1867- ல் நிறுவிய
சேக்கிழார் கோயில்



முகப்பு



கருவறை

ஆறுமுக நாவலர் அறக்கட்டளை
மாலைக்கட்டித் தெருவில் 2004 ல் கட்டிய
ஆறுமுக நாவலர் நிலையம்



நாவலர் அச்சியந்திரசாலை வைக்க அனுமதி வழங்கியவரும்,
நாவலர் இறந்தபோது அப்போதைய அரச அதிபராக இருந்தவர்
அரச அதிபர் அலுவலகத்திற்குத் துக்கதின விடுமுறை வழங்கியவரும்.



THE ARCHITECTS OF
JAFFNA HINDU COLLEGE

THE FOUNDER AND FIRST MANAGER



*Mr. S. Nagalingam (Advocate)*

## நாவலரின் சிந்தனையை நிறைவேற்றிய யாழ் இந்துக் கல்லூரி ஸ்தாபகர்கள்

CO-FOUNDER



*Mr. St. M. Pasupathy Chettiar*

எம்மண்ணில் உதித்த தெய்வத்திருமகன் நாவலர் பெருமானின் வாழ்வு மகத்தானது. அன்னாரின் தூய சிந்தனையைச் சைவத் தமிழர்கள் இன்றும் அறிந்திருத்தல் வேண்டும். மண்ணிற் பலர் பிறக்கின்றார்கள். ஒருநாள் மண்ணை விட்டுப் போகிறார்கள். சிலர் பிறருக்காக அர்ப் பணிப்புடன் செய்த தொண்டினால் அவர்கள் காலங்கடந்தும் நேசிக்கப்படுகிறார்கள். திருவள்ளுவர் திருக்குறளில்,

*"ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றைய ரெல்லாம்*
*செத்தாருள் வைக்கப் படுவர்"*

என்று குறிப்பிட்ட வார்த்தைகள் நாவலர் பெருமானுக்கு நன்றே பொருந்திற்று. நாவலர் பெருமானின் எண்ணங்கள் இன்னும் இறக்கவில்லை. அவர் எடுத்த முயற்சிகள் இன்றும் வீண்போகவில்லை. ஈழத்திலும் இந்தியாவிலும் மட்டுமல்ல புலம்பெயர்ந்து ஈழத்தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் நாவலர் பெருமானை நன்றியோடு நினைவுகூருகிறார்கள். நாவலர் பெருமான் சூரிய சந்திரர் உள்ள வரை வாழும் தகுதி பெற்றுள்ளார். சைவமும் தமிழும் உள்ளவரை நாவலர் என்னும் காவலரை விஞ்சிவிட யார்தான் வருவார்?! இப்புண்ணிய சீலர் தொடர்பாக இன்றைய தலைமுறை அறிவதற்காக இச்சிறிய நூல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
30
வருட நிறைவில்...

Printed by Kumaran Press (Pvt) Ltd. 0112 364550